ADVERTISEMENT
RECOMMENDATION
REWARD OF $75 CASH
IS AVAILABLE FOR EVERY BODY, WHO RECOMMENDS
NEW SMALL BUSINESS AND BUSINESS ARE ADERTISED THROUGH US
PHONE : 647 333 25 76
8130 Sheppard Ave E Unit208, Scarborough, ON

கனடாவிலிருந்து மாதமிருமுறை வெளிவரும் நமக்கான தமிழ் செய்திப் பத்திரிகை Est. 2018 இலவச இதழ்

REGISTERED NEWPAPER IN CANADA
www.puthiyakural.ca

புதிய குரல்

PUTHIYAKURAL

PUTHIYAKURAL NEWSPAPER IN ONE OF THE LEADING TWICE A MONTH NEWSPAPER IN CANADA

மலர் - 01 | 25 நவம்பர் 2023 | இதழ் - 03 | பக்கங்கள் 16

TUTORING
RECOMMENDATION
REWARD OF $75 CASH
IS AVAILABLE FOR EVERYBODY, AND STUDENT ID WITH US
PHONE : 647 333 25 76
8130 Sheppard Ave E Unit208, Scarborough, ON



பிரம்டன் நகரசபை வளாகத்தில் பறந்த தமிழீழத்தேசியக்கொடி!

ரொரன்டோ, நவ.25

கனடாவில் நேற்று பிராம்டன் நகர மண்டபத்தில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்ட வரலாற்று நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

பிராம்டன் நகர முதல்வர் பேட்ரிக் பிரவுன் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி மரியாதை செய்து வரலாற்று நிகழ்வை பதிவு செய்துள் ளார். தமிழீழத் தேசியக் கொடி தினத்தை முன்னிறுத்தி இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதேவேளை பிரம்டன் நகரசபை வளாகத்தில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்ட முதல் சந்தர்ப்பமாகவும் இது பதிவாகியுள்ளது.

இன்று நாம் அனைவரும் தமிழீழத் தேசியக் கொடி

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...



சாதி ஒடுக்குமுறை மனித உரிமை மீறலாக அங்கீகரிப்பு

ரொரன்டோ, நவ.25

ஒன்ராரியோ மாகாணத்தில் சாதி ஒடுக்குமுறை செயற்பாடு கள் மனித உரிமை மீறல் வகை யீட்டுக்குள் அங்கீகரிக்கப்பட் டுள்ளது.

குற்பிட்ட சாதி ஒன்றை ஒடுக்குமுறைக்கு உட்படுத்து வது மனித உரிமை மீறலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் பாட சாலை சபை சாதி ஒடுக்குமுறை காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டிருந்தது

கடந்த பெப்ரவரி மாதம் ஸ்காப்றோ பாடசாலை சபை யின் பொறுப்பாளர் யாழினி ராஜகுலசிங்கம், சாதி ஒடுக்கு

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

ரொறன்ரோவில் இடம்பெற்று வரும் யூத எதிர்ப்பு குரோதச் சம்பவங்கள்

ரொரன்டோ, நவ.25

ரொறன்ரோவில் அமைந் துள்ள பாடசாலைகளில் குரோத உணர்வு சம்பவங்கள் கூடுதலாக பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இவ்வாறான சம்பவங்கள் குறித்து இரண்டாயிரம் பெற்றோர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

ரொறன்ரோ மாவட்ட பாடசாலை சபைக்கு இந்த இந்த சம்பவங்கள் தொடர்பில் கடிதம் அனுப்பி வைத்துள்ள னர்.

பாடசாலைகள் பலவற்றில்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

2 மாதங்களுக்கு பிறகு கனேடியர்களுக்கான இ–விசா சேவைகளை மீண்டும் தொடங்கியது இந்தியா

ரொரன்டோ, நவ.25

ஏறக்குறைய இரண்டு மாத இடைநிறுத்தத்திற் குப் பிறகு கனடா நாட்டவர்களுக்கான மின்னணு விசா சேவைகளை இந்தியா மீண்டும் தொடங்கி யுள்ளது.இது குறித்த அதிகாரபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை என்றாலும், அரசாங்க வட்டா ரங்களிடம் இந்த தகவலை பெற்றதாக NDTV செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.காலிஸ்தான் பயங்கர வாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அரசாங்கத்திற்கு தொடர்பு இருப்பதாக கனேடிய அரசாங்கம் குற் றம் சாட்டியதை அடுத்து, இந்திய-கனடா உறவு களில் விரிசல் ஏற்பட்டது. இதனால், செப்டம்பர் 21ஆம் தேதி விசா சேவை கள் மொத்தமாக நிறுத்தப்பட்டது.அதன்பிறகு, கடந்த மாதம் வணிக, மருத்துவ விசாக்கள் உட்பட நான்கு வகையான விசா சேவைகள் மட்டும் மீண் டும் தொடங்கப்பட்டன.தற்போது சுற்றுலா விசா உட்பட நிறுத்திவைக்கப்பட்டிருந்த அனைத்து விசா சேவைகளும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

எத் தடைகள் வரினும் உறவுகள் இறந்த தினத்தை நினைவு கூருவோம்

துரைராசா ரவிகரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.25

எத் தடைகள் வந்தாலும் நவம்பர் 27 உறவுகள் இறந்த நாளினை நினைவு கூருவோம் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இன்று அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் முல்லைத் தீவு பொலிஸாரால் தடையுத் தரவை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

காசாவில் குழந்தைகள் கொல்லப்படுவதாக குற்றம் சாட்டிய ட்ரூடோ

ரொரன்டோ, நவ.25

காசாவில் பெண்கள், குழந்தைகள் கொல்லப் படுவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் கருத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பதிலளித்துள்ளார்.அக்டோபர் 7ஆம் தேதி நடந்த தாக்கு தலை சுட்டிக்காட்டி

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

எதிர்க்கட்சிகள் அதிகாரத்தைப் பெற சிறந்த வழி அரசாங்கத்துடன் இணைவதாகும்

கொழும்பு, நவ.25

நமக்காக அன்றி எதிர்கால சந்ததியினருக்காகவே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திப்பதாகவும், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே சிறந்த வழி எனவும், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு பெறும் அனுபவத்தின் அடிப்படையில் அடுத்த தேர்தலில்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

எதிர்க்கட்சிகள்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிகாரத்தைப் பெற முயற்சிக் கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட பிரதேச அரசி யல் பிரதிநிதிகளுடன் இன்று (25) பிற் பகல் மாத்தளை மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட பொதுஜன பெர முன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தொழிலாளர் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டதுடன், அவர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி யுடன் கலந்துரையாடினர். சில பிரச் சினைகளுக்கு அதே இடத்தில் தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

கடந்த காலங்களில் எதிர்கொண்ட பொருளாதார சவாலுக்கு முகங்கொடுத்து எவரும் நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை எனவும், ஆளும் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க தான் அந்த சவாலை ஏற்றுக்கொண்ட தாகவும், அனைத்து அரசியல் கட்சிகளும் தமக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்..

அவ்வாறு ஏற்றுக்கொண்ட நாட்டை சரியான திசையில் கொண்டு சென்று பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற் படுத்த முடிந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க, நாட்டை பொருளா தார நெருக்கடியில் இருந்து 5 வருடங்கள் சென்றாலும் மீட்க முடியாது என எதிர் கட்சி அரசியல்வாதிகள் கூறினாலும், 16 மாத குறுகிய காலத்தில் நாட்டை வங்கு ரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க முடிந்ததாகவும் தெரிவித்தார்.

இந்தப் பொருளாதார நெருக்கடியின் போது எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்தால் ஒரு சில மாதங்களுக்கு முன்னரே நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க முடிந்திருக்கும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை பாராட்டிய பிரதேச அரசியல் பிரதி நிதிகள், எதிர்காலத்தில் இந்த வேலைத் திட்டங்களுக்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"2021 முதலில் ஒரு நாடு என்ற வகை யில் பொருளாதார சிக்கலை எதிர்கொண் டோம். 2022 இல், இது ஒரு நெருக்கடி யாக மாறியது. நாட்டின் அனைத்து விவகாரங்களும் முடங்கியது. நாடு பணத்தை இழந்தது. வருமானம் இல்லா மலானது. அதே நேரத்தில், அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் நிறுத்தப் பட்டன. நாம் வங்குரோத்து அடைந்த நாடாக மாறியதால், வெளிநாடுகளின் உதவியையும் இழந்தோம்.

அந்த சவாலான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்று சொன்னவர்கள் கைவிட்டுச் செல்லும்பொது, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன்போது, அரசியல் வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளும் எனக்கு உதவின. எவ்வாறா யினும், நாங்கள் ஒன்றிணைந்து இந்த சவாலை எதிர்கொண்டு நாட்டை முன் னோக்கி கொண்டு சென்றோம்.

நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது, வீழ்ச்சியடைந்துள்ள இந்தப் பொருளாதாரத்தை மீளக் கட்டி யெழுப்ப 04 - 05 வருடங்கள் ஆகும் என்று பலர் கூறினார்கள். இதற்குத் தீர்வு இல்லை என்று பலர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். நாங்கள் தற் போது சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு வங்குரோத்து என்ற முத்திரையில் இருந்து விடுபடும் என நான் எதிர்பார்க் கிறேன். இந்த நடவடிக்கைகளுக்காக எங்களுக்கு 16 மாதங்கள் தேவைப்பட் டன. எதிர்க்கட்சிகள் எங்களை ஆதரித் திருந்தால் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே இதை நிறை வேற்றியிருக்கலாம்.

நாம் கடினமான பயணத்தையே மேற்கொண்டோம். எவ்வாறாயினும் அடுத்த வருடம் முதல் அரச ஊழியர் களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவை வழங்க முடிந்துள்ளது. இவ்வாறு செய்ய முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. மேலும், சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு அஸ்வெசும கொடுப்பனவு அதி கரிக்கப்பட்டது. இவை கடினமான நேரத்திலே செய்யப்பட்டன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான திட் டங்களின் மேம்பாட்டிற்காக பணத்தை வழங்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நான் அத்தோடு நிற்கவில்லை. இந் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு முடிந்த அளவு நிவாரணங் களை வழங்கவே நான் முயற்சிக்கிறேன். அதற்காக நாட்டில் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் திட்ட மிடப்பட்டுள்ளது. நவீனமயமாக்கலின் முதல் படி உரிமையாகும். இதன்படி காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு முழு உரிமைகொண்ட காணி உறுதிப்பத் திரம் வழங்கும் வேலைத்திட்டம் எதிர் வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட வுள்ளது. இந்தச் செயற்பாடுகளை மாவட்ட அபிவிருத்திக் குழுக்களிடம் ஒப்படைக்குமாறு பணிப்புரை வழங்கி யுள்ளேன். இந்தத் திட்டத்திற்கு அனை வரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். இது யாராலும் செய்ய முடியாத காரி யம். ஏனையவர்கள் வெறுமனே கதை பேசினார்கள். ஆனால் நாங்கள் அனை வரும் இணைந்து இவற்றை நடைமுறைப் படுத்தினோம்.

இந்த நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண் டும். எமக்காக அல்ல, நம் குழந்தைகளுக் காக, குழந்தைகளின் குழந்தைகளுக்காக ஒரு நல்ல நாட்டை உருவாக்க வேண்டும். நாம் அவர்களுக்காக இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம். ஆனால் எதிர்க் கட்சிகள் தங்களைப் பற்றி மாத்திரமே கவலைப்படுகிறார்கள். எவ்வாறு ஆட்சி யைப் பிடிப்பது என்று சிந்திக்கிறார்கள். அதிகாரத்தைப் பெறுவதற்கான சிறந்த வழி எங்களுடன் இணைவதே என்று நான் அவர்களுக்குக் கூறுகின்றேன். எங்கள் அனுபவத்தைப் பெற்று அடுத்த முறை ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்கு மாறு நான் அவர்களிடம் கூறுகிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட் டைக் கட்டியெழுப்பி முன்னோக்கிச் செல்வோம்." என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், விளை யாட்டு மற்றும் இளைஞர் விவகார இரா ஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் கமகே, பாராளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னகோன், மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலை வர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண் டார கோட்டேகொட, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க. , மத்திய மாகாண சபைத் தலைவர் எல். டி.நிமல சிறி உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சாதி ஒடுக்குமுறை...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

முறை குறித்து முதன்முதலில் கேள்வி எழுப்பியிருந்தார்.

பாடசாலை சபைகளில் சாதி ஒடுக்கு முறை குறித்த விடயம் பற்றி சுட்டிக்கப் பட்டதுடன் இது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழுவிலும் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. சாதி ஒடுக்குமுறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

"போரை முடிவுக்கு கொண்டுவந்ததே மகிந்த ராஜபக்ஷ செய்த ஒரே தவறு!"

கொழும்பு, நவ. 27

"இலங்கையில் தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு மாத்திரையும், சிங்கள மக்களின் தலைவலிக்கு வேறொரு மாத்திரையும் கிடையாது. இருக்கும் ஒரு மாத்திரையை பங்கிட்டுக்கொண்டுதான் முன்னோக்கி செல்ல வேண்டும்." - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

"இந்நாட்டில் சிங்கள - பௌத்த மக்கள் ஒரு விதத்திலும், தமிழ் மக்கள் இன்னுமொரு விதத்திலுமே கவனிக் கப்படுகின்றனர் என்று எனக்கு முன்னர் உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. (கோவிந்தம் கருணாகரன்) சுட்டிக் காட்டினார்.

தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு மாத்திரையும், சிங்கள மக்களின் தலைவலிக்கு மற்றொரு மாத்திரையும், முஸ்லிம் மக்களின் தலைவலிக்கு வேறொரு மாத்திரையும் கிடையாது . எல்லோரினது தலைவலிக்கும் ஒரு மாத்திரைதான் இருக்கின்றது. அதனை பங்குண்டுதான் இலங்கையராக முன் னோக்கி செல்ல வேண்டும். - என்றார்.

காசாவில்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

ட்விட்டரில் பதிலளித்த பிரதமர்நெதன் யாகு, "இஸ்ரேல் வேண்டுமென்றே பொதுமக்களை குறி வைக்கவில்லை," ஆனால் ஹோலோகாஸ்டுக்குப் பிறகு யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட மிக மோசமான கொடூரங்களில், பொது மக்களின் தலையை துண்டித்து, எரித்து, படுகொலை செய்தது ஹமாஸ் "பொது மக்களை பாதிப்பில் இருந்து காப்பாற்ற இஸ்ரேல் அனைத்தையும் செய்து வரும் அதே வேளையில், ஹமாஸ் அவர்களுக்கு தீங்கை ஏற்படுத்த அனைத்தையும் செய்து வருகிறது" காசா மக்கள் வெளியேற இஸ்ரேல் பாதுகாப்பான வழித்தடங் களை வழங்கியுள்ள நிலையில், ஹமாஸ் அவர்கள் வெளியேறுவதை துப்பாக்கி முனையில் தடுக்கிறது" என கூறியுள்ளார்.

மேலும் அவர், மக்களை கொன்று, மக்கள் பின்னால் மறைந்திருக்கும் ஹமாஸ் அமைப்பு, இரட்டை போர் குற்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். "ஹமாசின் காட்டுமிராண்டித்தனத்தை முறியடிக்க நாகரீக சக்திகள் இஸ்ரேலை ஆதரிக்க வேண்டும்" எனவும் அவர் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.முன்னதாக, ஆக்கிரமிக் கப்பட்ட காசா பகுதியில் பல லட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து உள்ளதையும், எரிபொருள் இல்லாமல் மருத்துவமனைகள் ஸ்தம்பித்துள்ளதை யும் சுட்டிக்காட்டி கனடா அதிபர் இந்த கருத்துக்களை தெரிவித்திருந்தார். ஹமாஸ் தாக்குதலுக்கு பதில் தாக்குதலை இஸ்ரேல் தொடங்கிய நிலையில், தற்போது வரை 11,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 4,500 குழந்தைகளும், 3,000க்கும் மேற்பட்ட பெண்களும் அடங்குவர்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், "இஸ்ரேல் அரசாங்கம் அதிகபட்ச கட்டுப்பாட் டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்". "உலகம் தொலைக்காட்சிகளிலும் சமூக ஊட கங்களிலும் மருத்துவர்கள், உயிர் பிழைத்தவர்கள், பெற்றோரை இழந்த குழந்தைகளின் சாட்சியங்களை பார்க்கிறது" என்ற அவர்.இந்த உலகம் பெண்கள், குழந்தைகள் கொல்லப்படு வதை பார்ப்பதாகவும், அது நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். போர் தொடங்கியதற்கு பின்னர், இஸ்ரேலுக்கு எதிரான கனடா அதிபரின் காட்டமான கருத்து இதுவாகும்.மேலும் அவர், ஹமாஸ் பணயக் கைதிகளை மனி தர் கேடயங்களாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் எனவும், 200க்கும் மேற்பட்ட பணயக் கைதிகளை விடு தலை செய்ய வேண்டும் எனவும் கூறி யிருந்தார்.

ரொறன்ரோவில்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

குரோத உணர்வைத் தூண்டும் வகையி லான சம்பவங்கள் பதிவாகத் தொடங்கி யுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ள னர்.

யூத சமூகத்தைச் சேர்ந்த மாணவர் களை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் பல்வேறு சம்பவங்கள் பாடசாலைகளில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் உள ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் சில சந்தர்ப்பங்களில் தாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரம்டன் நகரசபை...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகப்படுத்தப்பட்ட 33 ஆம் ஆண்டு நிறைவை மரியாதை செலுத்தும் முகமாக பிரம்டன் நகர மண்டபத்தில் ஒன்று கூடினோம்.

இன்று மட்டுமல்ல ஒவ்வொரு நாளும், நாங்கள் கனடாவாழ் ஈழத்தமிழர்களின் எழுச்சியையும், பிரம்டன் மற்றும் கனடா முழுவதுமான எமது சமூகங்கள் அனைத்தையும் வளப்படுத்துவதில் அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பையும் கொண்டாடுவோம்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பையும் மனித உரிமைமீறல்களை யும் தொடர்ந்துகொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பையும் ஒரு போதும் மறக்கமாட்டோம் என பிராம்டன் நகர முதல்வர் குறிப்பிட்டுள் ளார்.

எத் தடைகள்...

(முலதாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கொடிகளை அகற்றுமாறும், அலங் கார வேலைகள் இருக்க கூடாதென்றும், பாடல்கள் ஒலிபரப்பக்கூடாது என விரட்டியதாக எனக்கு தகவல் தெரிவித் திருந்தார்கள். இதேபோல் தேவிபுரம், முள்ளிவாய்க்கால், அளம்பில், முள்ளிய வளை போன்ற பல்வேறு பகுதிகளிலிருந் தும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றிருந்ததாக அறியத்தந்திருந்தார்கள். இருப்பினும் மக்கள் சில விடயங்களை கதைத்து முடிவு எடுத்திருக்கின்றார்கள்.

அளம்பில் துயிலும் இல்லத்தில் வைத்து எனக்குரிய தடையுத்தரவை வழங்கியிருக்கிறார்கள். எவ்வளவு தடை கள், உத்தரவுகளை தந்தாலும் நவம்பர் 27 உறவுகள் இறந்த நாளினை நினைவுகூர்ந்து நடத்துவோம்.

மஞ்சள் , சிவப்பு கொடி என்பது விடு தலைப்புலிகளது கொடி அல்ல. நீதி மன்ற கட்டளைகளை மதிக்கின்றோம். அக்கட்டளைகளை மதித்து நாம் உறவு களை நினைவு கூருவோம் என்றார்.

புதிய குரல்
எம்மை தொடர்பு கொள்ள: கலாநிதி பஹத் ஏ.மஜீத்
பிரதம ஆசிரியர், நிறுவுனர்
தொலைபேசி: +1437 329 1144
மின்னஞ்சல்: puthiyakuralcanada@gmail.com
புதிய குரல் நியுஸ்பேபர் பப்ளிகேசன் எல்.எல்.சி

இலங்கை அரசின் அணுசரணையில் சிறுபான்மை மக்களின் காணிகள் அபகரிப்பு தொடருகிறது

இலங்கை வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மாயமாக்கல் செயற்பாடுகள் தீவிரமடைந்து வருவதை அண்மைக் கால சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன. சிறுபான்மை மக்களின் பூர்வீக நிலங்களில் புத்தர் சிலைகளை வைப்பதும் தொல்பொருள் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்படுவதும் தொடர் கதையாகியுள்ளது. குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து சிறுபான்மை மக்களின் நிலங்களை அபகரிக்கும் சூழ்ச்சிகரமான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில்தான் சில தினங்களுக்கு முன்னர் இலங்கை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் இடம் பெற்ற சந்திப்பின்போது தொல்பொருள் திணைக்களத்தின் இந்த அத்துமீறல் செயற்பாடுகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. இதன்போது நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் அபகரிப்பதற்கு திணைக்களத்திற்கு எந்தவித அதிகாரமும் இல்லை என ஜனாதிபதி விளக்கிக் கூறினார். அத்துடன் நாட்டின் வரலாற்றை திரிபுபடுத்த வேண்டாம் என்றும் தொல்பொருள் திணைக்கள ஆணையாளரை வேண்டிக் கொண்டார். இந்த சந்திப்பையடுத்து தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் தனது பதவியை இராஜினாமாச் செய்த சம்பவமும் நிகழ்ந்தேறியது.

உண்மையில் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று தமது மக்களின் காணி உரிமையை நிலைநாட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. இதற்கு முன்னரும் அவர்கள் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக விருந்த காலத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை மீட்டு தமது மக்களுக்கு வழங்கியுள்ளனர். துரதிஷ்டவசமாக முஸ்லிம் எம்.பி.க்கள் இன்னமும் சமூகத்தை அடகு வைத்து தமது சுயநலன்களை நிறை வேற்றிக் கொள்வதிலேயே குறியாகவுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பொன்மலைக்குடா பிரதேசத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் புத்தர் சிலைகளை வைப்பதற்கு பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட முயற்சி அப் பகுதியில் பலத்த சலசலப்பைத் தோற்றுவித்திருந்தது. சிறுபான்மை மக்களின் நிலத்தில் அத்துமீறிப் பிரவேசித்தது மாத்திரமன்றி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காணி உரிமையாளர்களை துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்தும் வகையில் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் நடந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறான சிங்களமயமாக்கல் வேலைத்திட்டங்கள் கடந்த சில வருடங்களாக அதிகரித்தே வருகின்றன. எனினும் இவற்றை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவித காத்திரமான வேலைத்திட்டங்களும் அரசாங்க தரப்பிலிருந்தோ முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தரப்பிலிருந்தோ முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை.

அண்மையில் திருகோணமலை நகரில் புத்தர் நிலை ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. எனினும் இந்த விடயமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனினால் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதால் இறுதியில் இத்திட்டம் கைவிடப்பட்டது.

இவ்வாறு நாட்டில் தொடர்ச்சியான இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே முறுகல்களைத் தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் நிரந்தரமாக முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகளை அபகரிப்பதற்கான மறைமுக வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது என்பதை ஜனாதிபதி நன்கறிந்துள்ளார். அந்த வகையில் இதனை தடுத்து நிறுத்த அவர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்குவேன் என அடிக்கடி வலியுறுத்தி வருகின்ற போதிலும் அதனை செயலில் காட்டுவதாகத் தெரியவில்லை. அவர் தன்னை ஒரு கனவான் அரசியல்வாதி என் பதை நிரூபிக்க வேண்டுமாயின், ஜனாதிபதி உடனடியாக இவ்வாறான சிங்களமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும். இது தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்பு களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அதன் மூலமே வடக்கு கிழக்கில் அமைதியை நிலைநாட்ட முடியுமாகவிருக்கும்.

மறைத்து வைத்த அரிசியை கையகப்படுத்த நடவடிக்கை!

உணவு பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கும் சம்பா, கீரி சம்பா அரிசி வகைகளை கையகப்படுத்தி சந்தைக்கு வழங்குவதற்கான சட்டமூலம் விரைவில் தயாரிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சம்பா, கீரி சம்பா அரிசி வகைகளின் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள சம்பா மற்றும் கீரி சம்பா கையிருப்புகளை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த சட்டமூலம் தயாரித்து முடிக்கப்பட்டு அதனடிப்படையில் அரிசி இருப்புக்கள் கையகப் படுத்தப்படும். இந்த சட்ட மூலத்தை விரைவாக தயாரிப்பது தொடர்பில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிக்கான தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பணியின்போது உயிரிழந்த சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு

கொழும்பு, நவ. 25

சந்தேக நபரை துரத்தி சென்றபோது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் சார்ஜன்ட் ஆகப் பதவி உயர்வு வழங்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஜா-எல பகுதியில் கைவிலங்குடன் நீரோடையில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்தி சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, பின்னர் ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் வேலை வாய்ப்பு விடயத்தில் இனவாத கருத்தை முன்வைக்காதீர்கள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

கொழும்பு, நவ. 25

இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்கு இலங்கையர்களை அனுப்பும் விடயத்தில் இன வாத கருத்துகளை முன்வைக்க வேண்டாம். இன, மத ரீதியில் கட்சிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு இவ்வாறு செயல்பட வேண்டாம் என தொழில் மற்றும் வெளி நாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது இலங்கையிலிருந்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பப்பட வுள்ளமை தொடர்பில் விசேட கூற்றை முன்வத்த சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு பதிலளிக் கையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையின் வெளிநாட்டு கொள்கையின்படி நாம் ஓர் அணிசேரா நாடு. இஸ்ரேல் - காஸா யுத்தத்தை நாம் எதிர்க்கின்றோம். இதற்காக ஐ. நாவில் கூட நாம் குரல்கொடுத்துள் ளோம்.

இலங்கையிலிருந்து அரே பிய நாடுகளுக்கு பலர் வேலை வாய்ப்புகளுக்கு செல்கின்றனர். அதேவேளை ஏதாவது ஒரு நாடு எம்மிடம் தமது நாட் டுக்கான தொழிலாளர்களை கேட்கும் போது நாம் இன, மத ரீதியாக செயல்பட முடியாது.

இஸ்ரேல் - காஸா யுத்தம் ஆரம்பித்தபோது தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி தொழிலாளர்களை அங்கு அனுப்புவதை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தோம். தற்போது இஸ்ரேலுக்கு அனுப் பவுள்ள தொழிலாளர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப் படுவதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் கிடையாது. இஸ்ரேலால் காஸாவில் பிடிக்கப்பட்ட இடங்களுக்கு இவர்கள் தொழிலுக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

எனவே, இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து தொழி லாளர்களை அனுப்பக்கூடாது இனவாத கருத்துகளை முன்வைக்க வேண்டாம் இன, மத ரீதியில் கட்சிகளின் பெயர் களை வைத்துக்கொண்டு இவ் வாறு செயல்படவேண்டாம் - என்றார்.

வெளிநாடு செல்ல முயன்ற வடக்கு இளைஞர்கள் கைது!

கொழும்பு, நவ. 25

மோசடியான வீசாக்களை பயன்படுத்தி ஒஸ்திரியா செல்ல முயன்ற கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால் இளைஞர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 25, 27 வயது இளைஞர்கள் என்று தெரிய வருகின்றது. இவர்கள் துருக்கிய எயார்லைன்ஸ் விமானம் 11/731 இல் துருக்கியின் இஸ்தான்புல் நகருக்குச் செல்வதற்காக நேற்று காலை 07.30 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

துருக்கி எயார்லைன்ஸ் அதிகாரிகளிடம் தமது விமான அனுமதியை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்களில் ஒஸ்திரிய வீசாக்கள் தொடர்பில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவற்றை கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லை ஆய்வு பிரிவின் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், இந்த வீசாக்கள் போலியானவை என தெரியவந்தது. பின்னர், இளைஞர்களிடம் விசாரணை நடத்தியபோது, பொரளை பகுதியில் உள்ள தரகர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்டதாக அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

இதன்படி, குடிவரவு - குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப்பிரிவின் அதிகாரிகள் இருவரையும் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கட்டு நாயக்கவிமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.



ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவிக்கு ஆபத்து?

கனடாவில் எல்லா பக்கமும் எதிர்ப்பு!

ரொரன்டோ, நவ.25

கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ள நிலையில், அவர் பிரதமர் பதவியை இழக்கும் ஒரு அபாயம் ஏற்பட்டுள்ளது. கனடாவில் இப்போது பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ இருக்கிறார். இருப்பினும், கடந்த சில காலமாகவே அவர் தொடர்ச்சியாகப் பல சர்ச்சைகளில் சிக்கி வருகிறார். காலிஸ்தான் பயங்கரவாதி கொலை விவகாரத்தில் இந்தியாவை அவர் குற்றஞ்சாட்டிய நிலையில், சர்வதேச அளவிலும் அவர் சர்ச்சையில் சிக்கினார்.

இப்படிப் பல காரணங்களால் கனடாவில் அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீதான மக்கள் கோபம் அதிகரித்து வருகிறது. அங்கே வீட்டு வாடகை உச்சத்தில் இருக்கிறது. மேலும், பணவீக்கமும் மோசமான நிலையை அடைந்துள்ளது. ஜஸ்டின் ட்ரூடோ: இதனால் மக்கள் கடும் கோபத்தில் இருக்கும் நிலையில், அது கருத்துக் கணிப்புகளிலும் கூட எதிரொலிக்கிறது.

இதனால் கனடாவில் அரசியல் சூழல் தொடர்ந்து மோசமடைந்து வரும் நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை அவரது சொந்த கட்சியிலேயே அதிகரித்துள்ளது. "நாங்கள் செய்தது தவறு தான்.." பகிரங்க மன்னிப்பு கேட்ட கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.. என்ன காரணம் சொந்த கட்சியிலேயே எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அடுத்துத் தேர்தல் நடைபெறும் 2025 வரை அவர் பிரதமர் பதவியில் இருப்பாரா என்பதிலேயே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சொந்த கட்சியில் எதிர்ப்பு அதிகரித்தாலும் கூட கூட்டணி ஆதரவு இருப்பதாலேயே அவரால் இப்போது அதிகாரத்தில் இருக்க முடிகிறது. ஆனால், அங்கே எப்போதும் அதே நிலை இருக்கும் எனச் சொல்ல முடியாது. லிபரல்: ஏனென்றால் அங்கே வெளியாகும் சர்வேக்களில் ஆளும் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கான ஆதரவு தொடர்ந்து சரிந்து வருகிறது. சமீபத்தில் வெளியான சர்வேபடி எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் பியெர்ரே பொக்லீஎவரே என்பவருக்கு 10 முதல் 15 சதவிகிதம் கூடுதலாக வாக்குகள் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதேபோல தேர்தல் முடிவு அமைந்தால் கன்சர்வேடிவ் கட்சி தனிப்பெரும்பான்மை உடன் ஆட்சியைப் பிடிக்கும். ட்ரூடோ தனது பிரதமர் பதவியை இழக்க நேரிடும். இது குறித்து அங்குள்ள அரசியலைக் கவனிக்கும் வல்லுநர்கள் கூறுகையில், "இந்த எதிர்ப்பு ஏதோ இப்போது வந்தது இல்லை. கடந்த சில ஆண்டுகளாகவே ட்ரூடோ மீதான எதிர்ப்பு தொடர்ந்து அதிகரித்தே வந்தது. கடந்த 8 ஆண்டுகளாக ட்ரூடோ ஆட்சியில் இருந்த நிலையில், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு ட்ரூடோவே காரணம் எனப் பொதுமக்கள் நம்புகிறார்கள். பிரச்சினையைத் தீர்க்கும் திறனும் ட்ரூடோவுக்கு இல்லை என்பதே மக்கள் எண்ணமாக இருக்கிறது. இதுவே தேர்தல் முடிவுகளிலும் எதிரொலிக்கிறது" என்றார்.

கடும் தாக்கு: ட்ரூடோவுக்கு எதிராக உள்ள மக்கள் மன நிலையைப் புரிந்து கொண்ட கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பியெர்ரே பொக்லீஎவரே, எதிர்ப்பு வாக்குகள் அனைத்தும் தனக்கு வர ஏதுவாக பிரச்சாரம் செய்து வருகிறார்.

கனடாவில் அனைத்து பொருட்களின் விலையும் ஏறிவிட்டதாகத் தெரிவித்த அவர், இதை Justinflation என்று விமர்சிக்கிறார். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆட்சிக்கு வந்த 8 ஆண்டுகளில் அனைத்து பொருட்களின் விலையும் ஏறிவிட்டதாக அவர் தெரிவித்தார். அங்குள்ள மக்கள் ட்ரூடோவுக்கு எதிராக உள்ளது அனைவருக்கும் தெரியும். பொது இடங்களில் ட்ரூடோ செல்லும் போது அவருக்கு எதிராக மக்கள் கோஷமிடுவது எல்லாம் தொடர்ந்து நடந்தே வருகிறது.

ட்ரூடோவை வைத்துத் தேர்தலை எதிர்கொண்டால் நிச்சயம் தோல்விதான் என்பது லிபரல் கட்சியினருக்கே தெரியும். இதன் காரணமாகவே ட்ரூடோ தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவரது சொந்த கட்சியினருமே வலியுறுத்தி வருகின்றனர். மறுப்பு: இருப்பினும், பிரதமர் பதவியை ராஜினாமா செய்தால் அது தோல்வியை ஒப்புக் கொண்டது போல ஆகிவிடும். அதன்பிறகு ட்ரூடோவுக்கு அரசியல் எதிர்காலமே இருக்காது என்பதால் அவர் ராஜினாமா செய்ய மறுத்து வருகிறார். இருப்பினும், எதிர்ப்புகள் அதிகரிப்பதால் தேர்தல் நெருங்க நெருங்க அங்கே என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

கனடாவில் வீடற்றவர்களின் சோகம் வீதிகளில் கூடாரங்கள் அமைத்து வசித்தவர்கள் மரணம்!

ரொரன்டோ, நவ.25

கிழக்கு ஒன்றாரியோ மற்றும் அவுட்டவுயிசில் வீடற்ற முகாம்களில் இந்த மாதம் மூன்று பேர் இறந்து கிடந்துள்ளனர். இது ஒரு குழப்பமான போக்கைக் குறிக்கிறது என்றும் இது சோகமானது மட்டுமல்ல, தடுக்கக் கூடியது என்றும் குரல் கொடுப்போர் கூறுகின்றனர்.

கிங்ஸ்டனில் உள்ள பெல்லே பூங்காவில் உள்ள ஒரு முகாமில் வியாழக்கிழமை மாலை ஒரு கூடாரத்தில் ஒருவர் இறந்து கிடந்ததைக் காவல்துறையினர் கண்டறிந்தனர். அன்றைய தினம், மார்க் ஜோடோயின் என்ற மற்றொருவர் காடினோவில் ஒரு கூடாரத்தில் இறந்து கிடந்தார். கார்ன்வாலில் உள்ள முகாமில் 67 வயதான டயான் ஹெபர்ட் என்ற பெண் கடந்த 5-ம் திகதி உயிரிழந்தார். ஒவ்வொரு வழக்கிலும், இறப்புக்கான காரணம் இன்னும் தெரியவில்லை, அனைத்தும் விசாரணையில் உள்ளன. கிங்ஸ்டனில் வீடற்ற தன்மையை அனுபவிக்கும் மக்களுடன் பணிபுரியும் பிராவிடன்ஸ் மையத்தைச் சேர்ந்த சையிதா ஜாபர், இது இதயத்தை நொறுக்குகிறது. நம் சமூகத்தில் நிகழும் ஒவ்வொரு மரணமும், குறிப்பாக வீடற்றவர்களின் மரணம், சோகமானது மட்டுமன்றி பேரழிவையும் ஏற்படுத்துகிறது. அது தடுக்கக் கூடியதாக உணரத்தக்கது என்று கூறினார்.

அடுக்குமாடி குடியிருப்புகளின் வாடகை குறைவு; மக்கள் மகிழ்ச்சி செலவீனங்களை கட்டுப்படுத்த முயற்சி

ரொரன்டோ, நவ.25

கனடாவின் ரொறன்ரோவில் அடுக்குமாடி குடியிருப்புக்களின் வாடகைத் தொகை சொற்ப அளவில் குறைவடைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் ரொறன்ரோவில் அடுக்குமாடி குடியிருப்புக்களின் வாடகை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் ரொறன்ரோ அடுக்கு மாடி குடியிருப்புக்களின் வாடகைத் தொகை 0.8 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

கடந்த 2021ம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக ரொறன்ரோவில் வருடாந்த அடிப்படையில் வாடகைத் தொகை வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கனடாவில் அடுக்கு மாடி வீடுகளின் வாடகைத் தொகை அதிகமான நகரங்களில் ரொறன்ரோ இரண்டாம் இடத்தை வகிப்பதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களால் சாப்பிடாமல் வெளியே சென்ற பிரதமர்! வலுக்கும் இஸ்ரேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

ரொரன்டோ, நவ.25

கனடாவில் உணவகம் ஒன்றில் இரவு உணவருந்தச் சென்ற கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்துகொண்ட விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, செவ்வாய்க்கிழமை இரவு வான்கூவரிலுள்ள உணவகம் ஒன்றிற்கு உணவருந்தச் சென்றுள்ளார்.

அப்போது, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் உணவகத்துக்குள் நுழைந்து, ட்ரூடோவை சுற்றிவளைத்துள்ளனர்.

உடனே போர் நிறுத்தம் வேண்டும், ஜஸ்டின் ட்ரூடோ, உங்கள் கைகளில் இரத்தக்கறை உள்ளது, நீங்கள் ஒரு கொலைகாரர், எங்களுக்கு பதில் சொல்லுங்கள் என்றெல்லாம் கோஷம் எழுப்பியது அந்தக் கூட்டம். ஆகவே, உணவருந்த வந்த ட்ரூடோ, உணவருந்தாமலே உணவகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. விடயம் என்னவென்றால், அதேநாள் மாலையில், இந்திய உணவகமான ஏதை'ள என்னும் உணவகத்துக்குச் சென்றுள்ளார் ட்ரூடோ. அங்கேயும் சென்ற பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் அவரை சூழ்ந்துகொண்டு கோஷம் எழுப்பியுள்ளார்கள்.

வான்கூவர் உணவகத்திலிருந்து ட்ரூடோ வெளியேறியதும், பொலிசார் கூட்டத்தைக் கலைக்க முயன்றுள்ளார்கள். அப்போது, 27 வயது நபர் ஒருவர் பெண் பொலிசார் ஒருவரை முகத்தில் குத்திக் காயப்படுத்தியதுடன், அவரது கண்களை விரல்களால் குத்திக் காயப்படுத்தியுள்ளார். அவரும், பொலிசாரை பணி செய்யவிடாமல் தடுத்த 34 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக வான்கூவர் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.



சிறுவர்களின் புகைப்படங்கள் சோகமாக உள்ளது

காசாவின் நிலைமைகள் கவலை தருகிறது கனடிய பிரதி பிரதமர் கருத்து!

ரொரன்டோ, நவ.25

காசாவின் தற்போதைய நிலைமைகள் குறித்து கனடிய அரசாங்கம் தனது கவலையை வெளியிட்டுள்ளது. பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அண்மையில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை பொது வெளியில் விமர்சனம் செய்திருந்தார்.

இந்த நிலையில், காசாவின் மனிதாபிமான நிலைமைகள் பெரும் கவலை அளிப்பதாக கனடிய பிரதி பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் தெரிவித்துள்ளார்.

காசா பிராந்தியத்திலிருந்து கிடைக்கப்பெறும் புகைப்படங்கள் வேதனை அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசாவின் மனிதாபிமான நிலைமைகள் மோசமடைந்துள்ளது என்பது பலராலும் எற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிய பிரதமர் கனடிய பிரதமரின் கருத்துக்கு தனது எதிர்ப்பை டுவிட்டரின் ஊடாக வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



மாவீரர் நினைவு கல்வெட்டுகள் தூண்கள் அடித்து உடைப்பு கொடிகள் அறுத்து எறிவு

மட்டக்களப்பு, நவ.25

மட்டக்களப்பு வாகரையில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவு கல் வெட்டுக்களையும் கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீற் தூ ண்களை இனந்தெரியாதோரால் அடித்து உடைத்தது டன் சோடிக்கப்பட்ட கொடிகளை அறுத்து எறிந்து உள்ள சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை (24) இரவு இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினை வேந்தலை யிட்டு வாகரையில் உள்ள கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் ஏற்பாட்டுக் குழுவினர் துப்புரவு பணிகளை மேற்கொண்டு அங்கு காணியை சுற்றி அமைக்கப்பட்ட கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீற் தூண்களுக்கு மஞ்சள் சிவப்பு வர்ணம் தீட்டி கொடிகளை கட்டி சோடனை செய்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் இரவு மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீற் தூண்கள் மற்றும் மாவீரர் நினைவு கல்வெட்டுக்களை இனம் தெரியாத குழு ஒன்று அடித்து உடைத்தது டன் கொடிகளை அறுத்தெறிந்து சேதத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் விசனம் தெரிவித்துள்ளனர்.





நீர்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு வான்கதவுகள் திறப்பு மக்கள் அவதானம்



நுவரெலியா, நவ.25

மலையகத்தில் தொடர்ச்சி யாக பெய்து வரும் அடை மழை காரணமாக காசல்ரீ நீர்தேக்கம் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் 22.11.2023 அன்று இரவு முதல் வான் மேவி பாய்கின்றது.

இதனால் அணைக்கட்டிற்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன் படுத்துபவர்கள் அவதானத் துடன் இருக்குமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ள தோடு, களனி ஆற்றை பயன்படுத்துபவர்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப்பகுதியில் கடுமையான மழை பெய்து வருவதானால் அந்த நீர்த்தேக்கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றன.

எனவே நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளன.

இந்த மழை காரணமாக கெனியன், லக்ஷபான, நவ லக்ஷபான, பொல்பிட்டிய, மவுஸ்ஸாக்கலை, மேல் கொத்மலை ஆகிய நீர்தேக் கங்களின் நீர்மட்டம் அதி கரித்துள்ளதுடன், வான்கதவு களும் திறக்கப்பட வாய்ப்புள்ள தாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது குறித்து கஜேந்திரன்களுக்கு நீதிமன்றம் உத்தரவு

மட்டக்களப்பு, நவ.25

தமிழ் மாவீரர் தினத்தை இலக்காகக் கொண்டு கிழக்கு மாகாணத்தின் சம்பூர் பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில், போரில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் நினை வேந்தல் தொடர்பில் நீதிமன்றம் இரண்டு வார காலத்திற்கு ஆலோசனை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ் மக்களின் இரு பிரதிநிதிகள் உட்பட 17 பேரின் பெயர்களை குறிப்பிட்டு, மாவீரர் நினைவேந்தலின் போது பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது என வலியுறுத்தி மூதூர் நீதவான் நீதிமன்றம் நவம்பர் 23ஆம் திகதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கோரிக் கைக்கு அமைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106 (1) விதிகளின் பிரகாரம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக மூதூர் நீதவான் எச்.எம்.தஸ் னீம் பௌஸான் பிறப்பித்த உத்தரவில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

"இதன்படி சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சம்பூர் கிழக்கு ஆலங்குளத்தில் புலி உறுப்பினர்கள் புதைக்கப் பட்டிருக்கும் மயானத்திலோ அல்லது பொதுமக்கள் சட்ட ரீதியாக பயன்படுத்தக் கூடிய அல்லது எந்தவொரு மயா னத்திலோ விடுதலைப் புலி களின் இறந்த உறுப்பினர்களை நினைவுகூரும் நோக்கத்திற்காக மகாவீரர் நினைவேந்தல் தொடரில் காவல்துறை அதிகார வரம்பிற்குள், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106, பின்வரும் நபர்கள் மற்றும் பிறருக்கு பொது சுகாதாரம் மற்றும் பொது வழ்க்கைக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். (1) விதியின் அடிப்படையில் நான் பரிந்துரைக்கிறேன்."

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர், நாடா ளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட 17 பேரின் பெயர்களை உள்ளடக்கி நவம்பர் 23ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதிர்வரும் 14ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். தமிழ் மாவீரர் தினம் நவம்பர் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படு கிறது.

மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106ஆவது பிரிவின் விதிகளுக்கு அமைய மேற்சொன்ன நடவடிக்கைகளில் பங்கேற்கும் அனைத்து நபர்களுக்கும் இந்த உத்தரவு செல்லுபடியாகும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு வாழ்த்துச் சொல்லி, ஆசீர்வதித்த சர்வமதத்தலைவர்கள்

கொழும்பு, நவ.25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 78 ஆவது பிறந்தநாளான்று கொழும்பு 07 விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சர்வமத தலைவர்கள் விஜயம் செய்து வாழ்த்துக்களைத் தெரிவித்து ஆசீர்வதித்துள்ளனர்.





தமிழ் இளைஞன் தடுப்புக் காவலில் உயிரிழப்பு
பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், நவ.25

இளைஞரை கொடூரமாக சித்திரவதை செய்ததாக நம்பப் படும் வட்டுக்கோட்டை பொலிஸ் அதிகாரிகள் மீது உட னடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி, காவலில் வைத்து உயிரிழந்த தமிழ் இளைஞரின் உறவினர்கள் உள்ளிட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர்.

வட்டுக்கோட்டை, சித்தங் கேணியைச் சேர்ந்த 26 வயது டைய நாகராசா அலெக்ஸ் என்பவரின் சடலம் நவம்பர் 21ஆம் திகதி, இளவாலை வெல்லாவெளி மயானத்திற்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத் துச் செல்லப்பட்ட போது, இளைஞரின் உயிரிழப்பிற்கு நீதி கோரி பிரதேசவாசிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட பதாகைகள் மாத்திரமின்றி, "வட்டுக்கோட்டை பொலிஸ ாரின் அராஜகம் ஒழிக, அலெக் ஸுக்கு நீதி வேண்டும்" என சிங்கள மொழியிலும் எழுதப் பட்ட பதாதைகளை ஏந்தியி ருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த நாகராசா அலெக்ஸ், நவம்பர் 19 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்குக் கொண்டுவரப் பட்ட போது ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கீழ் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்ட பிரேத பரிசோ தனை அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நவம்பர் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் தடயவியல் நிபுணர் ருத்ரபசுபதி மயோரதன் தெரிவித்தமைக்கு அமைய, இறந்த இளைஞனின் முதுகு, கை மற்றும் கால்களில் பல காயங்கள் காணப்பட்டுள் ளன.

வட்டுக்கோட்டை சித்தங் கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்பவர் திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் வட்டுக்கோட்டைப் பொலிஸ ாரால் நவம்பர் 8ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விசாரணைக்காக எனக் கூறி தனது மகனை பொலிஸார் கைது செய்ததாக நாகராசா அலெக்ஸின் தாயார் நவம்பர் 10ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, நாகராசா அலெக்ஸை நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாகராசா அலெக்ஸை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்ட தாகவும் பிரதேச ஊடகவியலா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாகராசா அலெக்ஸ் சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப் பாணம் சிறைச்சாலையில் அடைக்க உத்தரவிடப்பட்ட நிலையில் உடல்நலக் குறைவு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, வைத்திய சாலையில் அவரை பார்வை யிட வந்த உறவினர்களிடம் தன்னை பொலிசார் சித்திர வதை செய்ததை நாகராசா அலெக்ஸ் விபரித்ததை உற வினர் ஒருவர் கைத்தொலை பேசி காணொளி பதிவு செய் துள்ளார்.

"பொலிஸ் சந்தேக வழக்கில் கொண்டுச் சென்று அடித்தனர். களவு போயுள்ளதாக சொல்லி அடித்தார்கள். பின் பக்கத்தால் கட்டிப்போட்டுட்டு, முகத்தை துணியால் கட்டிப்போட்டு தண்ணியை ஊற்றி ஊற்றி அடித்தார்கள். கொஞ்சமாகத் தான் சாப்பிட தந்தார்கள். அடித்துவிட்டு விட்டார்கள். ஒரு கயிற்றினால் கட்டி அடித் தார்கள். கேட்டு கேட்டு அடித்தார்கள் நான் இல்லை என்றேன். பையில் பெற்றோ லைத் தடவி அடித்தார்கள். நான் மயங்கிப் போனேன். இரண்டு கைகளையும் தூக்க இயலாது. முதலில் சாப்பாடு தரவில்லை. அடுத்தநாள் தான் சாப்பாடு தந்து அவர்களின் அறையில் கொண்டு சென்று, எதுவும் சொல்ல வேண்டாம் எனக் கூறினார்கள். அடுத்தநாள் என்னை அச்சுறுத்தினார்கள். சாராயம் குடிக்கத் தந்தார்கள். ஒரு பெக்," என நாகராசா அலெக்ஸ் காணொளியில் கூறியுள்ளார்.

இளைஞனின் மரணம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சரவணபவன் விடுத்துள்ள அறிக் கையில், நாகராசா அலெக்ஸ் பொலிஸ் காவலில் இருந்த போது சித்திரவதை செய்யப் பட்டார் என்பதில் சந்தேகமில்லை என தெரிவித்துள்ளார்.

"இந்த சம்பவத்தில் தெட் டத்தெளிவாக அவர் உயிரிழப் பதற்கு முதல் வழங்கிய வாக்கு மூலம் சரி உறவினர்களின் வாக்குமூலம் சரி அனைத்துமே அவர் பொலிஸாரது தடுப்பு காவலில் சித்திரவதை செய்யப் பட்டார் என்பதில் சந்தேக திற்கிடமின்றி காணப்படு கின்றது."

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட் டுள்ளார்கள் என இனங்காணப் பட்டுள்ளதாகவும், இதன் அடிப்படையில் அவர்கள் நால் வரும் தற்பொழுது மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள் வாங்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தில் ஊடகவிய லாளர்களை சந்தித்த யாழ்ப் பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாநகரின் முன்னாள் மேயர் விஸ்வலிங்கம் மணிவண் ணனும் அறிக்கையொன்றை வெளியிட்டு, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த வேண் டும் என வலியுறுத்தியுள்ளார்.

"உயிரிழந்த இளைஞனின் மரண வாக்குமூலம் சித்திரவதைகள் அம்பலமாகும் நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதுடன் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது வெறும் கண்துடைப்பாகும். உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும்."

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணிகளை மீண்டும் பெற்றுக்கொடுங்கள்!

எம். எஸ். தௌபீக் எம்.பி. பாராளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, நவ.25

2024 ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் இருபது இலட்சம் காணி உறுதிகள் வழங்குவதற்கு சுமார் இரண்டு பில்லியன் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது என்றும் இதில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த வர்களுடைய காணிகளை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக்கொடுங்கள் எனவும் வரவு செலவுத்திட்ட இரண் டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

கடந்த காலங்கள் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் மக்கள் சொந்த காணிகளை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட் டது. யுத்தம் முடிவடைந்து பல வருடங்கள் கழிந்தும் அவர் களுடைய சொந்த காணிகள் இதுவரையில் வழங்கப்பட வில்லை. திருகோணமலை மாவட்டத்திலும் இப்பிரச் சினை தொடர்ச்சியாக காணப் படுவதாகவும் பல முயற்சிகள் செய்தும் இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை எனவும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இப் பிரச்சினையை தீர்த்துத்தருமாறு கோரிக்கை விடுத்தார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணிய, தோப்பூர், செல்வநகர் பிரதேசங்களின் குடிநீர் பிரச்சினை நீண்டகாலமாக காணப்படுவதாகவும் இந்த வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் குடிநீர் பிரச்சினையை தீர்த்துத்தரு மாறும் கோரிக்கை விடுத்தார்.

அவருடைய பாராளுமன்ற உரையில், நாட்டில் தற்போது வாழ்வாதார செலவு உச்சநிலையில் காணப்படுகின்ற நிலையில் அரச ஊழியர்களது பத்தாயிரம் சம்பள அதிகரிப் பானது கண்துடைப்பு என்றும் இந்த காலகட்டத்தில் எதற்கும் போதுமானதாக இல்லை என்றும் குற்றம்சாட்டினார்.

உயர்தர பரீட்சை குறித்து கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு

கொழும்பு, நவ.25

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரி உச்ச நீதிமன் றத்திற்கு அனுப்பப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான மனுக்கள் நிராகரிக்கப்பட்டு வாபஸ் பெறப்பட்டமையினால் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என தெரிவிக்கப்பட டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்திற்கான உயர்தரப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை முன்னர் திட்டமிட்டபடி நடைபெறும் என பரீட்சைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.





கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்பரவு பணி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் நடைபெறுகிறது.

ராஜபக்ஷக்கள் ஆரம்பித்த முஸ்லிம் விரோத செயற்பாடுகள் இன்னும் முடிந்தபாடில்லை!



பாகம் 03

பொதுபலசேனாவும் முஸ்லிம் எதிர்ப்பும்

யுத்தம் முடிவடைந்த பிறகு ராஜபக்ச்சக்கள் அணுசரணையுடன் பௌத்த இனவாதிகள் ஆரம்பித்த முஸ்லிம் விரோத செயற்பாடுகளுக்கு முழுக்க ஆதாரங்கள் இருந்தும் நீதி வழங்கப்பட வில்லை.

2013 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் தொடர்ச்சியான பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் வன்முறையை அனுபவித்து வருகிறது, இது சிறுபான்மைக் குழுவொன்றை வெளிப்படையாக இலக்கு வைக்கும் கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதன் உச்சக் கட்டமாகும் என சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

'எரியும் வீடுகள் தொடக்கம் எரியும் உடல்கள் வரை இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் வன்முறை' எனும் தலைப்பிலான சுமார் 80 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் 2013 முதல் இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொண்டு வரும் வன்முறைகள் மற்றும் பாகுபாடு குறித்து விரிவான ஆய்வினை முன்வைத்துள்ளது.

சிங்கள - பௌத்த தேசியவாத எழுச்சியினிடையே 2013 தொடக்கம் இலங்கை முஸ்லிம்க-ளுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வு வளர்ச்சி கண்டுள்ளது. தண்டனையின்றி தப்பித்துக் கொள்ளும் கும்பல்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள், முஸ்லிம்களுக்கு எதிராக வெளிப்படையாக பாகுபாடு காட்டும், கொவிட் - 19 தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கட்டாயமாக தகனம் செய்தல், நிகாப் மற்றும் மதரசாக்கள் இரண்டையும் தடை செய்வதற்கான தற்போதைய திட்டங்கள் உள்ளிட்ட அரசாங்கக் கொள்கைகளினால் தோற்றம் பெற்றுள்ளது.

'இலங்கையில் முஸ்லிம் எதிர்ப்புணர்வு என்பது புதிதான ஒன்றல்ல, எனினும் அண்மைய ஆண்டுகளில் சடுதியாக அதிகரித்துள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள், அதிகாரிகளின் மறைமுக ஒப்புதலுடன் செய்யப்பட்டவை, ஆபத்தான கால இடை வெளியில் நிகழ்ந்துள்ளன. முஸ்லிம்களுக்கு வெளிப்படையாக விரோதமாக இருக்கும் பேச்சுக்கள் மற்றும் கொள்கைகளை தற்போதைய அரசாங்கம் கைக்கொண்டுள்ளதோடு இவ் விடயம் தொடர்புபட்டுள்ளது' என சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிப் பொதுச் செயலாளர் கைல் வார்ட் தெரிவித்துள்ளார்.

'இலங்கை அதிகாரிகள் இந்த ஆபத்தான போக்கை முடிவுக்குக் கொண்டுவந்து முஸ்லிம்-களை மேலும் தாக்குதல்களுக்கு உள்ளாவதிலிருந்து பாதுகாக்க வேண்டும், குற்ற வாளிகளை பொறுப்புக்கூறச் செய்ய வேண்டும் என்பதோடு முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும், துன்புறுத்துதல் மற்றும் பாகுபாடு காட்டும் அரசாங்கக் கொள்-கைகள் கைவிடப்பட வேண்டும்.'

முஸ்லிம்கள் மீது அதிகரித்து வரும் விரோதம்

முஸ்லிம்களுக்கெதிரன வன்முறை சம்பவங்கள் 2013 முதல் அடிக்கடி தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் தாக்குதல்கள் மற்றும் வெறுப்பு பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் தங்கள் செயல்களுக்கு தண்டனையின்றி தப்பித்துக் கொள்வதாகும்.

இஸ்லாமிய விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களின் படி, முஸ்லிம்களின் நுகர்வுக்கு அனுமதிக்கப்பட்ட உணவைக் குறிக்கும் உணவின் ஹலால் சான்றிதழை முடிவுக்கு கொண்டுவர சிங்கள - பௌத்த தேசியவாத குழுக்கள் வெற்றிகரமாக பிரச்சாரங்களில் ஈடுபட்ட போது, அதிகரித்த விரோதம் தொடங்கியது. இந்த பிரச்சாரங்கள் காரணமாக பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிறுவனங்கள் மீது பல தாக்குதல்கள் இடம்பெற வழிவகுத்தது, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் செயல்கள் தண்டனையின்றி செய்யப்படலாம் என்பதை சமிக்ஞையாக காட்டும் வகையில் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறாமல் இருந்தனர்.

> 'எரியும் வீடுகள் தொடக்கம் எரியும் உடல்கள் வரை இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் வன்முறை' எனும் தலைப்பிலான சுமார் 80 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் 2013 முதல் இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொண்டு வரும் வன்முறைகள் மற்றும் பாகுபாடு குறித்து விரிவான ஆய்வினை முன்வைத்துள்ளது.

2014 இல், தெற்கு கடலோர நகரமான அளுத்கமவில் ஒரு





> கொவிட் – 19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை கட்டாயமாக தகனம் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் இது தெளிவாகத் தெரிகிறது.

சிங்கள-பௌத்த தேசியவாதக் குழு பேரணியொன்றினை நடத்திய பின்னர் முஸ்லிம் களுக்கு எதிரான எதிர்ப்பு கலவரம் தொடங்கியது. இங்கும், வன்முறையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப் படவில்லை அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் அதிகாரிகள் தவறிவிட்டனர்.

இன மற்றும் மத சிறுபான்மையினருக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு 2015 இல் இருந்த அரசாங்கம் உறுதியளித்த போதிலும், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்தன. தேர்தலுக்குப் பின்னர், 2017 ஆம் ஆண்டு தெற்கு கடலோர நகரமான ஜிந்தோட்டயில் முஸ்லிம் விரோத குழுவொன்று வன்முறையில் இறங்கியது, அதே நேரத்தில் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள திகன மற்றும் அம்பாரை ஆகிய நகரங்களில் இதேபோன்ற வன்முறைகள் 2018 இல் இடம்பெற்றன. குற்றவாளிகள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பியது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பொலிஸாரும் படையி-னரும் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை அல்லது வன்முறையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னரான அதிகரிப்பு

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை ஐ.எஸ் அமைப்பெனக் கூறப்படும் உள்ளூர் இஸ்லாமியக் குழுவால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்-பட்டோர் கொல்லப்பட்ட பின்னர் முஸ்லிம்கள் மீதான விரோதம் கணிசமாக அதிகரித்தது.



இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து, 2019 மே 13 அன்று, இலங்கையின் வடமேல் மாகாணத்தில் உள்ள பல நகரங்களில் முஸ்லிம்கள் புனித மாதங்களில் ஒன்றான ரமழானின் போது உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வது நோய்த் தொற்றினை மேலும் பரவச் செய்யும் என்பதை உறுதிப்படுத்து வதற்கான விஞ்ஞானபூர்வ சான்றுகள் இல்லாத போதிலும் அது செயல்படுத்தப்பட்டது.

முஸ்லிம்களை இலக்காகக் கொண்ட அரசாங்கத்தின் கொள்கைகள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான வாக்கெடுப்பு காரணமாக சர்வதேச அழுத்தத்திற்கு அரசு அடிபணிந்தது. கட்டாய தகனம் கொள்கை விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும், அதிகாரிகள் நிகாப் தடை மற்றும் மதரஸா மீதான தடை உட்பட பாரபட்சமான சட்டங்களை நடைமுறைப்படுத்த முயல்கின்றனர். இக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத் தில், இலங்கையின் அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மதத்தின் அடிப்படையிலான பாகுபாடுகளிலிருந்து சுதந்திரத்தை மீறுகின்ற தாக்குதலுக்கு உள்ளாகினர். நாடு முழுவதும் உள்ள பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டன மற்றும் சமூக வலைதளங்களில் 'வெறுப்பு பேச்சு' பதிவுகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதி-ரான விஷ மப் பிரச்சாரங்கள் பதிவிடப்பட்டன. தாக்குதல்களுக்குப் பிறகு நூ ற்றுக்கணக்கான முஸ்லிம்களை தன்னிச்சையாக கைது செய்ய அதிகாரிகளால் துரிதமாக அவசரகால விதி-முறைகளும் பயன்படுத்தப்பட்டன.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து திசை திருப்ப முஸ்லிம் மக்களை குறிவைத்து பலிகடாவாக்கி வருகிறது.

கொவிட் - 19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை கட்டாயமாக தகனம் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் இது தெளிவாகத் தெரிகிறது, இஸ்லாத்தில் தகனம் செய்யப்படுவது வெளிப்படையாகத் தடைசெய்யப்பட்டிருக்கும் நிலையிலும், செயலாக இருக்கும் என்பதோடு இலங்கையைக் கட்டுப்படுத்தும் சர்வதேச மனித உரிமை சட்டத்தையும் மீறும் செயற்பாடாகவும் இருக்கும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் (பிடிஏ) உட்பட, முஸ்லிம்களை இலக்கு வைப்பதற்காக, தற்-போதுள்ள சட்டங்களை அதிகாரிகள் பயன்படுத்தியுள்ளனர், இது சந்தேக நபர்களை 90 நாட்கள் வரை குற்றச்சாட்டு இன்றி, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் தடுத்து வைக்க அனுமதிக்கும். இது ஐஊஊசீசு சட்டத்தின் தவறான பயன்பாடாகும், இது பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டி இன அல்லது மத வெறுப்பை பரப்புவதைத் தடைசெய்யும் சட்டமாகும்.

15 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணியும் செயற்பாட்டளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் தமிழ் மொழிக் கவிதை பற்றிய ஆதாரமற்ற கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு 2020 மே மாதம் 16 ஆந் திகதியன்று கைது செய்யப்பட்ட கவிஞர் மற்றும் ஆசிரியர் அஹ்னாப் ஜசீம் உட்பட தனிநபர்களை இலக்கு வைத்து இந்த சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட் டமை தொடர்பான பல சந்தர்ப்பங்களை இந்த இந்த அறிக்கை ஆவணப்படுத்துகிறது.

'பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கட்டாய தகனங்கள் முதல் நிகாப் மற்றும் மதரஸாக்கள் தடை வரை, இலங்கை அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரான அப்பட்டமான பாரபட்சமான கொள்கை நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தி வருகிறது. தற்போது பரிசீலனையில் உள்ள திட்டங்களை மறுபரிசீலனை செய்யுமாறு அதிகாரிகளை நாங்கள் வலியுறுத்துகிறோம், மேலும் இலங்கையில் சிறுபான்மை சமூகங்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்,' எனவும் கைல் வார்ட் தெரித்தார்.







கொக்குத்தொடுவாய் புதைகுழி விசாரணைக்காக ரேடார் இயந்திரங்களை கொண்டுவர ஆயத்தம்

முல்லைத்தீவு, நவ.25

இலங்கையில் போரில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகளின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

17 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதை அடுத்து செப்டம்பர் 15ஆம் திகதி தற்காலிகமாக நிறைவடைந்த கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இரண்டு மாதங்களுக்கு பின்னர், முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபனின் மேற்பார்வையில் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரேடார் கருவிகளைப் பயன்படுத்தி புதைகுழி எவ்வளவு தூரம் வியாபித்துள்ளது என்பதை தீர்மானிக்க உள்ளதாக நேற்று அகழ்வு பணிகள் நிறைவடைந்ததையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அகழ்புப் பணிகளுக்கு பொறுப்பான முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ குறிப்பிட்டார்.

"புதைகுழி துப்புரவு செய்யப்பட்டு, போடப்பட்டிருந்த மண் மற்றும் பொலிதீன் அகற்றப்பட்டு, அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இந்த புதைகுழியானது ரேடார் கருவிகள் மூலம் இந்த புதைகுழி எவ்வளவு தூரத்திற்கு வியாபித்துள்ளது என்பதை கண்டறிவதற்கு ரேடார் கருவிகள் ஊடாக பரீட்சித்துப்பார்க்கப் படவுள்ளது. இது எதிர்வரும் 23, 24, 25 ஆகிய திகதிகளில் இடம்பெறும்."

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயம் அருகே தற்செயலாக எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பாக ஜூன் மாத இறுதியில் பொலிசார் தாக்கல் செய்த வழக்கு ஒக்டோபர் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு அருகில் வேறு உடல்கள் புதைக்கப்பட்ட இடங்கள் உள்ளனவா? என்பதை கண்டறிய ரேடார் கருவியை பயன்படுத்துவது தொடர்பில் தொல்பொருள் தடயவியல் ஆய்வாளர் ராஜ் சோமதேவ நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அகழ்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் முல்லைத்தீவு நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில், புதைகுழிக்கு அருகில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மேலும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வு பணிகளை மேற்கொள்ள பணம் எஞ்சியிருப்பதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"தற்போது விடுவித்துள்ள நிதியை வைத்து இன்னும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வை செய்ய முடியுமென தெரிவித்துள்ளனர். வீதிக்கு குறுக்காகவும் வீதிக்கு அடியிலும் கூட சிலவேளை மனித எச்சங்கள் இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதை வரும் நாட்களில் சரியாக பரிசீலித்து நீண்ட நாட்களாக செய்ய வேண்டிய ஒரு செயற்பாடு என்ற அடிப்படையில் அதற்கான நிதியை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அரசாங்க அதிபருக்கு விடுவிக்கும் முயற்சிகள் இன்றிலிருந்து ஆரம்பமாகும் என சொல்லப்பட்டுள்ளது. அந்த நிதி விடுவிக்கப்படும் என சொல்லப்படுகிறது."

செப்டெம்பர் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக முடிவடைந்ததோடு, கிடைத்த ஆதாரங்களை ஆய்வு செய்வதற்காக அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக சடலங்களை மீட்கும் விசாரணையில் முன்னோடியாக இருந்த தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ குறிப்பிட்டிருந்தார்.

முல்லைத்தீவு மற்றும் கொக்குத்தொடுவாய் புதைகுழி தோண்டும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது நாட்களின் பின்னர் பதினேழு பேரின் எலும்புகள் மீட்கப்பட்டதோடு, விடுதலைப் புலி உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் சில ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றன.

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய் பதிக்க நிலத்தை தோண்டும் வேளையில் ஜூன் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைகளின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டது.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது

அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு



கொழும்பு, நவ.25

உரிய நேரத்தில் தேர்தல் இடம்பெறுவது ஜனநாயகத்திற்கு மிக அவசியம் என்பதனால் இலங்கையில் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்தொடு இலங்கையின் அரசமைப்பின்படி ஏனைய தேர்தல்களும் இடம்பெறும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அடுத்த வருடம் நடைபெறவேண்டிய தேர்தல் சுதந்திரமான நியாயமானதாக்க இடம்பெறும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் முதலீட்டை ஈர்ப்பதற்கான முயற்சிகள் பற்றி இலங்கை ஜனாதிபத்தியதுதான் கலந்துரையாடியதாகவும் அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்



பொலிஸ் காவலில் இருந்த இளைஞர் உயிரிழப்பு: சுவிஸர்லாந்து கவலை

கொழும்பு, நவ.25

யாழில் பொலிஸ் காவலில் இருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சுவிஸர்லாந்து கவலை வெளியிட்டுள்ளது.

இளைஞரின் இறப்பு குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக சுவிஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். காவலில் இருக்கும் போது தாக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டை இலங்கை அதிகாரிகள் பாரபட்சமின்றி விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஜபக்ஷக்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்

தமிழ்த் தலைவர்கள் ஒன்றாக கோரிக்கை

கொழும்பு, நவ.25

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத் துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் காரண மாக இருந்து நாட்டை சீரழித்து வங்குரோத்து அடையச் செய்வதற்கு காரணமாக இருக்கும் ராஜ பக்ஷக்களுக்கு எதிராக அவ்விதமான நிகழ்வுகள் மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தும் வகை யில் உரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், தமிழ் மக்களை எதிரிகளாக காண்பித்து, நாட்டை சூறையாடிக்கொண்டிருந்த தரப்பினர் ராஜபக்ஷக்களே என்பதை உயர்நீதி மன்றமே வெளிப்படுத்தியுள்ளமை வரவேற்கத் தக்கது என்பதோடு, சிங்கள மக்கள் எதிர்காலத்தி லாவது அனைத்து ராஜபக்ஷக்களையும் அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவது குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத் துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் முன் னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன் னாள் பிரதமர், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபுள்யூ. டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர மத்திய வங்கி யின் நிதிச் சபை ஆகிய தரப்புக்கள் 'பொறுப் புக்கூற வேண்டும்" என்று உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பு தொடர்பில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கருத்து வெளி யிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

மாவை.சோ.சேனதிராஜா தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரத்தினை சீரழித்தவர்கள் யார் என்பது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இதுவர வேற்கத்தக்க விடயமாகும். விசேடமாக, பெரும் பான்மை சமூகத்தினரால் தொடடுக்கப்பட்ட வழக்குகளின் மூலமாகவே அவை வெளிப்படுத் தப்பட்டுள்ளது. அந்த வகையில் குறித்த தீர்ப் பினை வைத்து எதிர்காலத்தில் ராஜபக்ஷக்கள் இனவாத பிரசாரங்களை மேற்கொள்ள முடியாது.

போர் முடிவடைந்ததன் பின்னர் ராஜ பக்ஷ க்கள் பொறுப்புக்கூறலைச் செய்யவில்லை. மாறாக நாட்டின் இனவாதத்தினை தோற்று வித்து, இனப்பிரச்சினைக்கான தீர்வினை இழுத்தடித்து தமிழ் மக்களை ஏமாற்றினார்கள். சிங்கள மக்கள் மத்தியில் அந்தச் செயற்பாடுகளை பயன்படுத்தி வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரங்களில் இருந்தார்கள்.

அவ்விதமான போக்கானது நாட்டின் எதிர்காலத்தினையே சீர்குலைக்கப்போகின்றது என்று எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் எடுத்துரைத்தபோதும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. சிங்கள மக்களும் அதனைப் புரிந்து கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில், தற்போது சிங்கள மக்களுக்கும், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் யார் காரணம் என்கிற விடயம் அப்பட்டமாக உணரக்கூடியவாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது. எனவே அடுத்தகட்டமாக பொறுப்புக் கூறலைச் செய்ய வேண்டிய ராஜபக்ஷக்கள் உள்ளிட்டவர்கள் உரிய இழப்பீடுகளை வழங்கு வதற்குரிய நடவடிக்கைளை முன்னெடுப்பதோடு மட்டுமல்லது இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் நாட்டில் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் தண்டனைகள் உரிவாறு வழங்கப்பட வேண்டும் என்றார்.

சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில், ராஜ பக்ஷக்களை கர்மவினை சூழந்துகொண்டுள்ளது. அதன் பிரதிபலிப்புக்களை அவர்கள் தற்போது அனுபவிக்கின்றார்கள். அவர்கள் போர் வெற்றியுடன் அதிகார போதையில் தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் மோதலுக்கு உட்படுத்தி அதில் குளிர் காய்ந்தார்கள்.

அதுமட்டுமன்றி, மக்கள் கூட்டங்கள் தமக்குள் முரண்பட்டுக்கொண்டிருக்கையில் ராஜபக்ஷக் களும், அவரது சகாக்களும் நாட்டின் வளங்களை சூறையாடினார்கள். ஊழல், மோசடிகளை பெருமளவில் மேற்கொண்டார்கள். இதனை அவ்வப்போது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், ஊடவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் வெளிப்படுத்திய தருணங்களில் அவர்களை படுகொலை செய்தார்கள்.

இந்த நிலையில் பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற முதுமொழிக்கு அமைவாக, இப்போது நாட்டின் மீயுர் பெறுமானம் மிக்க உயர்நீதிமன்றமே ராஜபக்ஷக்கள் நாட்டின் பொருளாதார சீரழிவுக்கு காரணமானவர்கள் என்பதை அடையாளப்படுத்திவிட்டது.

ஆகவே, இனமோதலுக்கு வித்திட்டவர்களும், நாட்டை வங்குரோத்துக்கு உள்ளாக்கியவர்களும் ஒரேதரப்பினராக இருக்கையில் அவர்களை அரசி யலில் இருந்து ஒட்டுமொத்தமாக அகற்றுவதற் கான நடவடிக்கைகளை சிங்கள மக்களே எடுக்க வேண்டும். அதுமட்மன்றி, இவ்வாறு இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தரப்பினர் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும்.

மேலும், மனுதாரர்கள் தங்களுடைய மனுக் களில் தண்டை மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் சம்பந்தமான கோரிக்கைகளை வழங்கியிருக்கவில்லை. ஆகவே அதுசம்பந்தமாக அடுத்தகட்டமாக சட்ட நடவடிக்கைகளை முன் னெடுத்து விரைவில் பொறுப்புக்கூற வேண்டியவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கை யில், எம்மைப்பொறுத்தவரையில், முதற்தடவை யாக நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கிய நபர்களை அடையாளப்படுத்தி உயர் நீதிமன்றம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பொறுப்புக்கூற வேண்டியவர்களை பொதுமக்கள் மத்தியில் அடையாளப்படுத்தியுள்ளது. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் பொறுப்புக் கூறல் செயற்பாடானது தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டே வருகின்றன.

ஆகவே இந்த நிலைமை மீண்டும் மீண்டும் நிக ழாதிருக்க வேண்டுமாக இருந்தால், துறைசார்ந்த அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண் டும். அதன்மூலம் இவ்வாறான பொருளாதாரக் குற்றங்கள் மீண்டும் நிகழாமை உறுதிப்படுத்தப் படும். அவ்வாறில்லது விட்டால் பொறுப்புக் கூறல் செயற்பாடு ஒருபோதும் முன்னெடுக்கப்பட மாட்டாது, பாதிக்கப்பட்ட மக்கள் எவருக்கும் எவ்விதமான முன்னேற்றகரமான நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என்றார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில், உயர்நீதிமன்றம் நாட்டின் பொருளாதார வங்கு ரோத்துக்கு காரணமானவர்களை அடையாளப் படுத்தும் வகையில் தீர்ப்பளித்துள்ளது. நீதித் துறையில் வரலாற்றில் இதுவொரு முக்கியமான விடயம். ஆனால் அவ்வாறு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எந்தவிதமான தீர்ப்புக்களும் வழங்கப்பவில்லை.

அதேநேரம், குறித்த நபர்கள் பில்லியன் கணக் கில் வெளிநாடுகளில் முதலீடுகளை செய்துள்ளார் கள், சேமிப்பில் பணத்தை வைத்துள்ளார்கள் என் றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்வதற்கான பொறிமுறைகளையும் உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கவில்லை.

இதேநேரம், பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார் என்று பார்க்கின்றபோது, ராஜபக்ஷக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளார்கள். ஆனால் அவர்களில் ஒருசிலர் வெளிநாட்டு குடியுரிமைகளைக் கொண்டவர்கள் அவர்கள் மீது இந்த நாட்டின் குடியுரிமையை நீக்கினாலும் அவர்கள் பிறிதொரு நாட்டில் வாழ்வதற்கான உரிமைகள் உள்ளன. அதே நேரம் அவர்களால் கொண்டு செல்லப்பட்ட நிதிகள் கூட மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவரப்படாது.

ஆகவே நாட்டு பொருளாதார ரீதியாக மோச மடைந்துள்ள நிலையில் அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மீது நடவடிக்கைகளை முன்னெ டுக்கும் அதேநேரம், அடுத்து வரும் காலப்பகுதி யில் வெளிநாடுகளில் கொண்டு சேர்த்துள்ள நிதியை மீண்டும் உள்நாட்டுக்கு கொண்டுவருவதற்கான பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

அதேநேரம், பொறுப்புக்கூறல் தொடர்பில் எதிர் மறையான மனோநிலை உடையவர்களிடத்தில் அதனை எதிர்பார்க்க முடியாது. ஆகவே அவர்களை உரிய நீதிப்பொறிமுறை ஊடாக சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைகள் ஊடாகவே இழப்பீடு களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

மலையக மக்களுக்கான தீர்மானங்களுக்கு ஆதரவு

சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

முன்னாள் ஜனாதிபதி ஜே . ஆர். ஜெயவர்த்தன தலைமையி லான அரசின் திட்டமிட்ட இனப்படு கொலையிலும் ஈழ விடுதலை போராட்டத்திலும் பெரியளவில் தங்களை தியாகம் செய்த மலையக மக்கள்தான் இலங்கையின் பொருளாதா ரத்தை இன்றும் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள்.

எனவே, அவர்களுக்கான காணி உரிமை, சம்பள அதிகரிப் புக்கள் உடனடியாக வழங்கப் பட வேண்டும். மலையக மக்களுக்காக எடுக்கப்படும் சகல தீர்மானங்களுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட

விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், 1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலி யில் இராணுவத்துக்கு எதிராக முதலாவதாக நடந்த கண்ணி வெடித் தாக்குதலுக்காக மலை யகத்தில் 2 ஆயிரம் பேர் கொல் லப்பட்டார்கள். பல ஆயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்க் கப்பட்டார்கள். அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங் களுக்கு இரவோடு இரவாக கலைக்கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில்தான் கண் ணிவெடி வெடித்தது. மலைய கத்திலிருந்த மக்கள் என்ன செய் தார்கள்?அப்போது ஜனாதிபதி யாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த் தன தலைமையிலான அரசு நீண்டகாலமாக திட்டமிட்டி ருந்த தன்னுடைய இன ரீதியான செயல்பாட்டை செயல்படுத்து வதற்கு அப்போதிருந்த சிறில் மத்தியு, அத்துலத் முதலி, காமினி திஸநாயக்க போன்றவர்களின் தலைமையில் மிகப் பெரிய இனப்படுகொலையை 83 இல்கட்டவிழ்த்து விட்டது.

இவ்வாறான திட்டமிட்ட இனப்படுகொலையில், ஈழ விடு தலைப் போராட்டத்தில் மிகப் பெரியளவில் தங்கள் உயிர்களை தியாகம் செய்தவர்கள் மலையக மக்கள். மலையகத்தில் வாழும் மக்கள் அநியாயமாக கொல்லப் பட்டார்கள் - அங்கிருந்து கலைக்கப்பட்டார்கள்.

இந்த வரவு - செலவுத் திட்டத் தில் அரச ஊழியர்களின் சம் பளம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றும் தோட்டங் களில் வேலைசெய்கின்ற எமது சகோதர உறவுகளின் நாள் சம் பளம் 600 ரூபாயை தாண்டிப் போக முடியாமல் உள்ளது. அவர்களின் வாழ்க்கையை யோசித்துப் பாருங்கள். இந்த 600 ரூபாய் ஒரு நாள் சம்பளத் துடன் எப்படி அந்த மக்கள் வாழ முடியும்?தமது பிள்ளை களுக்கு எப்படி கல்வியை வழங்க முடியும்? சுகாதாரத்தை, போசாக்கான உணவை எப்படி வழங்க முடியும்?

இந்த நாட்டில் மிக மோச மாக ஏமாற்றப்படுகின்ற சமூக மாக மலையக உறவுகள் உள்ள னர். 10 பேர்ச் காணி கொடுத்து ஒரு வீடு கட்டுவதற்குக்கூட ஒரு முழுமையான திட்டம் அரசி டம் இல்லை. அந்த மக்களில் பலருக்கு இன்னும் சொந்தக் காணி இல்லை.

அண்மையில்கூட அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமை யில் மலையகம் 200 ஆண்டுகள் நிறைவு விழா கொண்டாடப் பட்டது. அந்த மக்களின் வியர்வையிலும் கண்ணீரிலும் இரத்தத்திலும் தான் அந்த 200 ஆண்டுகள் கடந்துள்ளன. இலங்கையை வருமானமுள்ள நாடாக மாற்றியவர்கள் எமது மலையக சகோதரர்கள்.

இன்று இளம்தலைவராக ஜீவன் தொண்டமான் அந்த மக்களுக்கு தலைமை தாங்கு கின்றார். இங்குள்ள ஏனைய மலையகம் சார்ந்த சகோதர உறுப்பினர்களின் ஒற்றுமை அந்த மக்களுக்கு பலமாக அமைய வேண்டும். அந்த மக்களுக்கு இந்த அரசு 2 ஏக்கர் காணி கொடுக்கத் தயாரா? ஏன் உங்களிடம் காணி இல்லையா? அவர்களுக்கு காணி வழங்க அரசு ஏன் தயங்குகின்றது? - என்றார்.

ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் பாராளுமன்றம் வரத் தடை!

சட்டம் வேண்டும் என்கிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் பாராளுமன்றம் வரு வதற்கு தடை விதிப்பதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு -செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"ஜனாதிபதிமார் மீண்டும் பாராளுமன்றம் வருவதை, சட்டம் இயற்றி தடை செய்ய வேண்டும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவாரா என தெரியவில்லை. ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் வருவது தவறான முன்னுதாரணமாகும்.

ஜே.ஆர். ஜயவர்தன, சந்திரிக்கா அம்மையார் போன்றோர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர் நாடாளுமன்றம் வரவில்லை." - எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

அதேவேளை, உணவை வீணடித்தால் தண்டனை விதிப்பதற்கான சட்டமும் கொண்டுவரப்படவேண்டும். தமக்கு உண்ணக்கூடிய அளவுக்கு அதிகமாக பகிர்ந்து உணவை வீணடிப்பது ஏற்புடையது அல்ல. வெளிநாடுகளில் அவ்வாறு செய்தால் தண்டம் அறவிடப் படும்." - எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்

நினைவேந்தலுக்கு நீதிமன்றம் அனுமதி

மன்னார், நவ.25

மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராக தடை உத்தரவை பிறப்பிக்க கோரி அடம்பன் பொலிஸார் தடை உத்தரவை மன்னார் நீதிமன்றத்தில் கோரியிருந்த நிலையில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூற மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி எஸ். டினேசன் தெரிவித்தார்.

குறித்த வழக்கு விசாரணை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற உள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராக தடை உத்தரவை பிறப்பிக்க கோரி அடம்பன் பொலிஸார் தடை உத்தரவை இன்று சனிக்கிழமை(25) மன்னார் நீதிமன்றத்தில் கோரி இருந்தனர்.

குற்றவியல் நடைமுறைக்கோவை 106 ஆம் பிரிவின் கீழ் குறித்த தடை உத்தரவை அடம்பன் பொலிஸார் கோரி இருந்தனர்.

குறித்த வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் பதில் நீதவான் இ.கயஸ்பெல்டானோ முன்னிலையில் இடம்பெற்றது.

குறித்த வழக்கில் சுமார் 20 பேருடைய பெயர் கள் தனி நபர்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட 20 பேருடைய பெயர்கள் குறிப்பிட்டு 21 வது நபர்களாக ஏனைய பொது மக்கள் என பெயர்கள் குறிப்பிடப்பட்டு குறித்த கட்டளையினை கோரி இருந்தனர்.

பதில் நீதவான் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது. இதன்போது குறித்த நினைவேந்தலை அமைதியான முறையிலும், அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவு கூற மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளில் விடு தலைப் புலிகளுக்குச் சொந்தமான இலச்சினைகள் மற்றும் கொடிகளை பயன்படுத்தாது, அமைதி யான முறையில் நினைவு கூற நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. என சட்டத்தரணி எஸ். டினேசன் தெரிவித்தார்.

இதேவேளை முருங்கன் பொலிஸாரினால் 4 நபர்களுக்கு எதிராகவும், மடு பொலிஸார் 2 நபர் களுக்கு எதிராகவும் தடை உத்தரவு கோரியிறுந்த மையும் குறிப்பிடத்தக்கது.

மாவீரர் நினைவேந்தலுக்கு தடை:

பொலிஸ் நிலையங்களின் மனுக்கள் கிளிநொச்சி நீதிமன்றால் நிராகரிப்பு

கிளிநொச்சி, நவ. 25

மாவீரர் நாள் நினைவேந் தலை தடைசெய்யுமாறு கோரி கிளிநொச்சி நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் இயங்கும் 7 பொலிஸ் நிலை யங்கள் தாக்கல் செய்த வழக்கு களை மாவட்ட நீதிமன்றம் நிராகரித்தது.

குற்றவியல் சட்டத்தின் 106ஆவது பிரிவின் கீழ் மாவீரர் நிகழ்வுகளை தடை செய்யுமாறு கோரி கிளிநொச்சி நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள 7 பொலிஸ் நிலையங்கள் தனித் தனியாக வழக்கு தாக்கல் செய்தன.

இந்த வழக்கு நேற்று கிளி நொச்சி மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போதுள்ள ஏழு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி களும் முன்னிலையாகினர்.

இந்த வழக்குக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத் தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர்.

"நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை. அதனை மறுக்க முடியாது. அதேநேரம் குற்றவியல் சட்டத்தின் 106 என்பது பொதுத் தொல்லை விதித்தல் என்பதாகும். அதன் கீழ் நினைவு நிகழ்வுக்குத் தடை விதிக்க முடியாது" - என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

அவரின் வாதத்தை ஏற்று நீதிமன்றம் மாவீரர் தின நினை வேந்தலுக்கு தடை விதிக்க மறுத்ததுடன் 7 வழக்குகளை யும் தள்ளுபடி செய்தது.

மாவீரர் நினைவேந்தலுக்கு தேவையான பொருள்கள் சேகரிப்பதற்கு விசேட கூடம்!

யாழ். பல்கலை மாணவர்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 25

மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப் படுத்தும் வகையில் நினைவேந் தலுக்கு தேவையான பொருட் களை சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட் டுள்ளது.

குறித்த பொருட்களை யாழ்ப்பாணம், திருநெல்வே லியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தற்காலி கமாக அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு கூடத்தில் வழங்க முடியும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நினைவேந்தலுக்கு தேவை யான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி என்ப வற்றை நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் குறித்த சேமிப் புக் கூடத்தில் வழங்க முடியு மெனவும் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் புதைகுழி நேற்றும் 5 எலும்புக்கூடுகள் மீட்பு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற் றும் 5 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமானது. ஆறாவது நாளான நேற்றும் அகழ்வு பணி தொடர்ந்தது.

இந்த நிலையில், நேற்றைய 5 மனித எலும்புக் கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டன. அத்துடன், இலக்கத் தகடு, மணிக்கூடு, துப்பாக்கி சன்னங்கள் என்பனவும் மீட்கப்பட்டன என்று முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா தெரிவித்தார்.

இதேநேரம், இன்று ஞாயிற்றுக்கிழமை அகழ்வுப் பணிகள் நடைபெறாது என்றும் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் அகழ்வுப் பணிகள் தொடரும் எனவும் அவர் கூறினார்.

மாவீரர் நாள் நிகழ்வுகள்:

தடை கோரி யாழிலும் வழக்குகள் தாக்கல்!

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ள மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளை தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று மனுக்களை பொலிஸார் தாக்கல் செய்தனர்.

இந்த மனுகள் மீதான விசாரணை நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கோப்பாய் துயிலும் இல்லம், நல் லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடம் முன்பாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் என்பவற்றில் நடைபெறவுள்ள மாவீரர் தின நினைவேந்தல்களை தடை செய்யுமாறு கோரியே யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்கள் இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளன.

காவலில் இளைஞன் பலி: நான்கு பொலிஸார் கைது!

திங்களன்று அடையாள அணிவகுப்பு



யாழ்ப்பாணம், நவ. 25

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 25 வயதுடைய இளைஞர் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நால்வரையும் எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப் புக்கு தயார்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் ஓர் அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயது இளைஞன் பொலிஸ் காவலில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஐந்து பொலிஸ் உத்தியோகத் தர்களை கைது செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்பவர் நவம்பர் 8 ஆம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் அவரின் நண்பருடன் இணைந்து கைது செய்யப்பட்டார். இவர், கடந்த நவம்பர் 12 ஆம் திகதி மல்லா கம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸ் காவலில் இருந்த போது கடுமையான சித்திர வதைக்கு உட்படுத்தப்பட்டார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக் கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் விசாரணை களை மேற்கொண்ட யாழ்ப் பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா, வாக்கு மூலங்கள் மற்றும் நீதிமன்றில் சமர்ப்பித்த சட்ட மருத்துவ வல்லுநரின் அறிக்கையின் அடிப்படையில் ஆட்கொலை என விளம்பல் வழங்கினார்.

சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முக்கிய சாட்சியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அதைத் தொடர்ந்து, மருத்துவ பரிசோதனை செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சித்திரவதை குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து வட்டுக் கோட்டை பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவை சேர்ந்த உப பொலிஸ் பரிசோகதர் உள்பட நால்வரும் கடந்த திங்கட்கிழமை முதல் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி. மேனன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு விசாரணை களை முன்னெடுத்தது.

அந்தக் குழுவினரினால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று சனிக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னி லையில் முற்படுத்தப்பட்டனர். நால்வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட் டார். இந்த வழக்கு நாளை திங்கட்கிழமை மேலதிக விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.

இதனிடையே, கைதான பொலிஸார் பாதுகாப்பு நிலை மைகளை கருத்தில் கொண்டு அநுராதபுரம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள் ளனர்.

மரண தண்டனையை எதிர்நோக்கும் தாயாருக்கு பொது மன்னிப்பு வழங்குக

ஜனாதிபதியிடம் குரலற்றோரின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25

மரண தண்டனையை ஏதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலாவை விடுதலை செய்வதற்குரிய பொதுமன்னிப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கான குறித்த கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் குரலற்ற வர்களின் குரல் அமைப்பினரலால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக

மக்கள் தொடர்பு அதிகாரி குறித்த கோரிக்கை கடிதத்தினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த கோரிக்கை கடிதத்தின் பிரதிகள் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக குரலற்ற வர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கோரிக்கை கடிதம் வருமாறு,

14ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு, மரண தண்டணையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது: -

மேற்படி, இல.6/3, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தாயான செ. சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் மேல்முறையீடு காரணமாக இப்பெண்மணி மீண்டும் மரணதண்டணையை எதிர்நோக்கியுள்ளார்.

அதாவது, 2004ம் ஆண்டு இடம்பெற்ற, அமைச்சர் டக்லஸ்தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ. சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இவர், சுமார் 14 ஆண்டுகள் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதி மன்றினால் "15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத் தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் செலுத்த வேண்டும்." என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல் நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ. சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரணதண்டனை தீர்ப்பளித்துள்ளது.

நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்திய லீலா தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதில் கூட மிகச்சிரமப்படுகிறார்.

இவ்வாறான நிலையில்தான் இவர், இறுதி முயற்சியாக இலங்கை உயர் நீதிமன்றத்தின் வாசலை ஏகியிருக்கிறார். கௌரவ ஜனாதிபதி யாகிய தாங்கள், சமூகங்களுக்கிடையிலான நல்லெண்ண சமிக்கையாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட இன்னபிற விடயங்களிலும் கரிசனை கொள்வதாக நம்பப்படுகிறது.

இதேநேரம், அரச இயந்திரங்களின் செயல்பாடுகளோ முற்றிலும் மாறாக இருப்பது கவலையளிக்கிறது. இவ்வழக்குடன் சம்பந்தபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்தேகநபரான "செ.சத்திய லீலாவை வழக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை" என்று திறந்த மேல் நீதிமன்றத்தில் வெளிப்படையாக தெரிவித்திருந்த நிலையிலும் கூட இப்பெண்மணி இன்று சாவுத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

ஆகவே, "14 வருடங்களாகக் குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக்குள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்துவிட்டு விடுதலையாகி வெளியில் வந்த பின்பும் ஒரு மரண தண்டனை கைதியாக மீண்டும் சிறை செல்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. அதற்கு, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்" என்ற நிலைப்பாட்டில் இருக்கும் இந்த பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில்

பொது மன்னிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கௌரவ ஜனாதி பதி அவர்களை, ஒரு சுயாதீன மனிதநேய அமைப் பாக நாம் கேட்டு நின்கின்றோம் - என்றுள்ளது.

ரணில் சொல்லுவார் ஆனால் செய்யமாட்டார்!

மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள 400 கோடி ரூபாயை பெற்றுக் கொள்ள அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், ரணில் விக்கிரம சிங்க சொல் வார் ஆனால், செய்யமாட்டார் - வரும் என்பார் ஆனால் வராது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நீர்வழங்கல் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபி விருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவா தம் நேற்று சனிக்கிழமை பாரா ளுமன்றத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி பாராளுமன் றத்துக்கு அண்மையில், வந்து தெரிவிக்கும்போது 1948இல் திறைசேரியில் வெளிநாட்டு நிதி அதிகமாக இருந்து என தெரிவித்திருந்தார்.

அது உண்மை. வெளிநாட்டு மூலதனத்தில் ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இலங்கையே இருந்தது. பிரித் தானியாவுக்கும் கடன் கொடுத்ததாக ஜனாதிபதி தெரி வித்திருந்தார். எனது நினைவின் பிரகாரம் ஜேர்மனிக்கே கடன் கொடுதோம் என நினைக்கி றேன். கடன் கொடுக்கும் அளவுக்கு வெளிநாட்டு நிதி எம்மிடம் இருந்தது என்றால் அது எமது உழைப்பாகும்.

இலங்கையில் ஏற்றுமதி என அப்போது தேயிலை, இறப்பர் மாத்திரமே இருந்தது. இதனால் மலையக தோட்ட தொழிலா ளர்களின் உழைப்பே நாட்டின் வெளிநாட்டு நிதி அதிகளவில் இருப்பதற்கு காரணமாகும். இவ்வாறு பெரும் உழைப்பை நாட்டுக்காக செய்த இந்த மக்களுக்கு இலங்கை அரசு என்ன பரிசு வழங்கியது என்றால் ஒன்றும் இல்லை

என்றே கூறவேண்டும்.

உலக வங்கி, மத்திய வங்கி, செஞ்சிலுவை சங்கம் மற்றும் இலங்கைக்கு வந்து சென்ற ஐக் கிய நாடுகளின் விசேட அறிக்கை யாளர் போன்ற அனைவரும் இலங்கையில் மிகவும் பின்தங் கிய மக்களாக பெருந்தோட்ட மக்களை அடையாளம் காட்டிவிட்டு சென்றுள்ளனர்.

இலங்கையை ஆசியாவில் உயர்ந்த இடத்துக்கு கொண்டு சென்ற மக்களுக்கு இலங்கை அரசு இந்த மக்களுக்கு வழங் கிய பரிசு இதுதான். தமிழ்த் தேசிய முற்போக்கு முன்னணி 2015இல் நல்லாட்சி அரசாங்கத் துடன் இணைந்து செயல்பட் டிருந்தது. இந்திய அரசாங்கத் துக்குக்கூட எமது மக்களின் நிலைமை தொடர்பாக சரியான தெளிவு இருக்கவில்லை. நுவ ரெலியா மாவட்டத்தில் மாத் திரம்தான் எமது மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றே நினைத்துக் கொண்டிருந்தார் கள். ஆனால், நாட்டில் எங் கெல்லாம் எமது மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அவர்களுக்கு தெரிவித்திருக்கிறோம்.

வரவு - செலவு திட்டத்தில் பெருந் தோட்ட அபிவிருத்திக் காக 400 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் காணி உரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதை வரவேற் கிறோம். ஆனால், அதனை எப்படியாவது அவரிடமிருந்து பிடுங்கி எடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், ரணில் விக்கிரம சிங்க தொடர்பில் எமக்கு நன்கு தெரியும். சொல்வார் ஆனால் செய்யமாட்டார் - வரும் என்பார் ஆனால் அது வராது.

நாங்கள் இங்கு குறை கூறி னால் அது உங்களை அல்ல. ஜனாதிபதியைத்தான். நாங்கள் முரண்பட்டுக் கொள்ளத்தேவை யில்லை. நாங்கள் வெளியில் இருந்து அழுத்தம் கொடுக் கிறோம். நீங்கள் உள்ளே இருந்து அழுத்தம் கொடுங்கள் - என்றார்.

வவுனியா இரட்டைக் கொலை; தேடப்பட்ட சந்தேகநபர் கைது!

வவுனியா, நவ. 25

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். இந்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத் தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெ டுத்து வந்தனர். இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களை கைது செய்ய குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

குறித்த மூவரும் தலைமறைவாக இருந்ததால் அவர்களது கடவுச் சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டன. அவர்களை கைது செய் வதற்கான பகிரங்க பிடியாணை உத்தரவு கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணை பிரிவினர் சந்தேக நபர்களில் ஒருவர், ஹொறவப்பொத்தானை பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவரை கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட் டார்.

புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன்?

கொழும்பு, நவ. 25

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன வுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்புக் காலம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதற்கு அரச உயர்மட் டத்தில் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள் ளன.



தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவுக்கு ஆரம்பத்தில் தலா மூன்று மாதங்கள் வீதம் இரண்டு தடவையும் பின்னர் தலா மூன்று வாரங்கள் வீதம் இரண்டு தடவையுமாக நான்கு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இறுதியாக இரண்டு தடவைகள் சேவை நீடிப்புக்கான அனுமதியை அரசமைப்பு பேரவையிடத்தில் கோரப்பட்டபோது, பேரவையானது, ஏகமனதாக புதிய பொலிஸ் அதிபரை நியமிக்குமாறு வலியுறுத்தி சேவை நீடிப்புக்கான அனு மதியை வழங்கியிருக்கவில்லை. எனினும், தலா மூன்று வாரங்கள் வீதம் சி. டி. விக்கிர மரட்னவுக்கு பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்தான் தேச பந்து தென்னக்கோனை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் குறிப்பிடு கின்றன.

புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கான நியமனத்துக்கு தகுதி உடையவர்களாக லலித் பதிநாயக்க, நிலந்த ஜயவர்தன ஆகியோரும் உள்ளமையால் இப்போது யாரை நியமிப்பது என்பதில் சற்று குழப்பமான நிலைமைகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார், பூநகரி மின் திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்

மின்சக்தி அமைச்சர் சபையில் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம், பூநகரி மின்னுற்பத்தி திட்டம், சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம், மட்டக்களப்பு ஓட்டமாவடி மின் திட்டம் உள்ளிட்ட மின்னுற்பத்தியுடன் தொடர்புடைய 6 திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் - என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான உத்தேச செலவினம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

எரிபொருள் மற்றும் மின்சார கட்டமைப்பில் கடந்த ஆண்டு பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டோம். எரிபொருள் பற்றாக்குறை, மின்விநியோக துண்டிப்பை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்ற போராட்டம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. பெரும் சவால்களுக்கு மத்தியில் அமைச்சராக பொறுப்பேற்றேன். நெருக்கடியான சூழ் நிலையில் இருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் உட்பட சகல தரப்பினருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக சந்தையின் விலைக்கேற்ப எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணம் நிர்ணயிக் கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப் பட்டது. இதற்கமைய 2022 ஓகஸ்டில் 9 ஆண்டுகளுக்கு பின்னர் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது. மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் மின்னுற்பத்தி செலவுகளை முகாமைத்துவம் செய்ய 2014 முதல் 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டு வரை திறைசேரி சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாயை செலுத்தியுள்ளது.

நாட்டின் மின்னுற்பத்திக்கான கேள்விக்கு அமைய மின்னுற்பத்தி நிலையங்கள் ஸ்தாபிக் கப்படவில்லை. சம்பூர் அனல் மின்நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் உயர்நீதிமன்றம் சென்றார்கள். இதனால் சம்பூர் அனல் மின்நிலைய திட்டம் கைவிடப்பட்டது.

இதனால் மின்சார சபை வருடாந்தம் 9 ஆயிரத்து 500 கோடி ரூபாயை வருடாந்தம் மேலதிகமாக செலவிட்டது.

இதனை போல் உமா ஓயா திட்டத்துக்கு எதிராக பண்டாரவளை மற்றும் ஊவா வெல்லச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனால் 900 கோடி ரூபாய் தாமத கட்டணத்தை செலுத்த நேரிட்டது.

மின்வலுத்துறை தொடர்பில் எடுத்த தீர் மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் அனை வரும் இன்றைய நிலைக்கு பொறுப்புக் கூறவேண் டும். நிறைவடைந்த 10 மாத காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை 6 ஆயிரம் கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது.

மின்சார சபை கடந்த 9 மாத காலப்பகுதியில் மாத்திரம் ஆயிரத்து 200 கோடி ரூபாய் நட் டத்தை எதிர்கொண்டுள்ளது. மின்சார சபை இலாபமடையுமாக இருந்தால் அதன் பயனை நாட்டு மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம் - என்றார்.

எமது இனத்துக்காக போராடியவர்களின் சுவடுகள் அழிக்கப்படுவது மனவேதனை!

சபையில் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டுவந்த நினைவு தூபிகள் அகற்றப்பட்டத்தை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன் என சாணக் கியன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந் நாட்டில் மக்களின் வரிகளை பெற்றுக்கொண்டு மாளிகைகளும் கோபுரங்களும் கட்டி வைத்துள்ள இராணுவ தளபதிகள் மற்றும் இராணுவ மேலதிகாரிகளின் பாதுகாப்புக்கென பாரிய நிதி செலவிடப்படுகின்றது.

இருப்பினும் இராணுவச் சிப்பாய்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் யுத்தம் முடிந்த பின்னும் கோட்டாபயவினால் மேலதிகமாக இணைக்கப்பட்டு அவர்கள் மேசன், தச்சுத்தொழில் மற்றும் கூலி வேலைகளுக்காக அமர்த்தப்பட்டார்கள்.

இலங்கை மக்கள் அவர்களின் வேதனத்துக்கும் சேர்த்து தற்பொழுது பாரிய வரி செலுத்தும் நிலைமைக்கு தள்ளப்படுள்ளார்கள். இருப்பினும் இவர்களும் இப் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்படுள்ளனர்.

ஆனால் இவர்களின் தற்போதைய செயல்பாடுகள் இன விரோதத்தை மென்மேலும் தூண்டும் விதமாகவும் அவமரியாதை செய்யும் விதமாகவும் அமைந்துள்ளன.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டு வந்த நினைவுத் தூபிகள் அகற்றப்பட்டதை நான் மிகவும் துக்ககரமான சம்பவமாக கருதுகின்றேன். ஓர் இனத்துக்காக இனத்தின் விடுதலைக்காக போராடிய வீரர்கள் துயிலும் இந்த இல்லங்களை அழிப்பது எமது சமூகத்துக்கு மிகவும் மன வேதனையளிப்பதாகும். அவர்களின் பெற்ற பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் உறவினர்கள் பிள்ளைகளின் மனநிலையை யோசித்துப் பாருங்கள்- என்றார்.

வட்டி விகிதங்களை மேலும் குறைக்கும் மத்திய வங்கி!

கொழும்பு, நவ. 25

மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை குறைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், நாணயச் சபை தமது இரண்டாவது நாணயக் கொள்கை மீளாய்வை நேற்று முன்தினம் நடத்தியது.

இதன்போதே கொள்கை வட்டி வீதங்களை குறைப்பதற்கு நாண யச் சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் 10 இல் இருந்து 9 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், நிலையான கடன் வசதி வீதம் 11 இல் இருந்து 10 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் உலகப் பொருளாதாரத்தில் தற்போதைய மற் றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக மத்திய வங்கி தெரி வித்துள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வீதிக்கு குறுக்காக செல்லும் சாத்தியம்

விசேட சட்ட மருத்துவ அதிகாரி

முல்லைத்தீவு, நவ. 25

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. என முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஐந்தாவது நாளாக நேற்று இடம் பெற்று ற்றநிறைவடைந்த பின் னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

ஐந்தாவது நாளாக தொட ரும் கொக்குத்தொடுவாய் மனி தப்புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக்கூடு களின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கிச் சன னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக் கப்பட்டுள்ளது. இன்றையதி னம் ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூ ரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப் பட்டது. இதன் முடிவுகள் நாளை (இன்று) அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்ற பிற்பாடே கிடைக்கப்பெறும்.

இவ் புதைகுழியானது வீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக் கின்றன. எனினும் பரிசோ தனையின் பின்னரே இறுதி முடிவுகள் என்னால் உறுதியாக கூறமுடியும்- என்றார்.

22 மில்லியன் ரூபா செலவில் வாகரையில் அபிவிருத்திகள்

மக்கள் பாவனைக்காக கையளிப்பு

மட்டக்களப்பு, நவ. 25

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக பிரிவில் 22 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதுடன் நீர்வழங்கல் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மணல் வீதிகளற்ற கிராமங்கள் எனும் கருத்திட்டத்திற்கமைய மாவட்டம் பூராகவுமுள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் சற்று பின்னடைவில் காணப்படும் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்தின் உட்கட்டுமானங்களை விருத்திசெய்யும் முகமாக அங்கு அமைக்கப்பட்ட 16 கிரெவல் வீதிகளையும் நீர் வழங்கல் திட்டத்தினையும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சரு மான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

அதற்கமைய கோறளைப்பற்று வடக்கு, புனாணை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் புனரமைக்கப்பட்ட 2ஆம் குறுக்கு விவேகானந்தா வீதி, 6ஆம் குறுக்கு காந்தன் வீதி, 5ஆம் குறுக்கு வள்ளுவர் வீதி, 7ஆம் குறுக்கு தம்பிமுத்து வீதி, 8ம் குறுக்கு வேலுப்பிள்ளை வீதி, தேவாலய வீதி, இணைப்பு வீதி,1ஆம் குறுக்கு வீதி, 2ஆம் குறுக்கு வீதி, 3ஆம் குறுக்கு வீதி, 5ஆம் குறுக்கு வீதி, 4ஆம் குறுக்கு வீதி, 8ஆம் குறுக்கு வீதி மற்றும் வட்டவான் கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட துறையடி வீதி, சித்தி விநாயகர் வீதி, பொதுக்கட்டட குறுக்கு வீதி என்பன சுமார் 22 மில்லியன் செலவில் கிரெவல் வீதிகளாக செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக் காக கையளிக்கப்பட்டது.

அதனுடன் இணைந்ததாக சுனாமி பேரலையினால் பாதிக்கப் பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வட்டவான் புதிய கிராம மக் கள் மிகநீண்ட காலமாக எதிர் நோக்கி வந்த குடி நீர் பிரச்சனைக்கு தீர்வாக நீர் வழங்கல் திட்டத்தினையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி சிறீகாந்த், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் ஜீ.அருணன், மாவட்ட செயலக பொறியியலாளர் சுமன், உதவிப் பிரதேச செயலாளர் பிரணவன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஜதீஷ்குமார் மற்றும் நிர்மல், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவினுடைய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுதர்ஷன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஆறுமுகம் தேவராஜ், மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தம்பிராஜா ஜிவரன், நவரெத்தினம் திருநாவுக்கரசு உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாவற்காடு நாமகள் வித்தியாலய மாணவிகள் கர்நாடக சங்கீதத்தில் தேசிய மட்டச் சாதனை!

மட்டக்களப்பு, நவ. 25

அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்டப் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற் குட்பட்ட நாவற்காடு நாமகள் வித்தியாலய மாணவிகள் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இதற்கமைய இடைநிலைப் பிரிவில் மு. கதுர்ஸ்ணா என்ற மாணவியும், மேற்பிரிவில் சி. மாதங்கி என்ற மாணவியும் முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டியில் வெற்றியீட்டிய மாண வர்களை மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன் ஆகியோர் நேரடியாக பாடசாலைக்கு சென்று குறித்த மாணவர்களை பாராட்டி பரிசில் வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரபு நாடுகளை கண்டுகொள்ளாது இலங்கை அரசு செயல்படக்கூடாது!

ரவூப் ஹக்கீம் எம். பி.



கொழும்பு, நவம்பர் 25

இஸ்ரேலுக்கு தொழில் வாய்ப்புகளுக்கு இலங்கையர்களை அனுப்புவதன் மூலம் அங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டால் அது எமது நாட்டில் தேவையற்ற பிரச்னைகளை தூண்ட காரணமாக அமையலாம். அத்துடன், இந்த விடயத்தில் அரசாங்கம் அரபு நாடுகளை கண்டுகொள்ளாது சந்தர்ப்பவாதமாக செயல்படக்கூடாது. அதனால் இலங்கையர்களை தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காஸாவில் பெரும் மனித உரிமைகள் மீறல் மற்றும யுத்தக் குற்றங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அதேநேரம் இலட்சக் கணக்கான இலங்கை தொழிலாளர்கள் அரபு நாடுகளில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பது கவலைக்குரிய விடயம். அதேநேரம் இவ்வாறு அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு அங்கு இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டமும் இருக்கிறது.

அத்துடன், யுத்தம் காரணமாக காஸாவில் இருக்கும் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி வரும் நிலையில் அங்கு ஏற்பட்டு வரும் தொழில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கவிருப்பதுடன், பலஸ்தீனர்களிடமிருந்து பல வந்தமாக பறித்துக்கொண்ட காணிகளிலேயே இலங்கையர்களுக்கு இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதுதான் உண்மை நிலை. அதனால் இதுதொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், எமது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பிழையான நேரத்தில் மேற் கொள்ளப்படும் பிழையான தீர்மானம் என அரபு நாடுகளின் பல தூதுவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தார்கள். தென்னாபிரிக்க ஜனாதிபதி, பிரேசில் ஜனாதிபதி ஆகியோர் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை துண்டித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், நாங்கள்

உணர்வுபூர்வமான இந்த விடயம் தொடர்பாக கவலையுடன் பார்க்க வேண்டும்.

அரபு நாடுகள் இஸ்ரேல் தொடர்பாக கலந்துரையாடி வரும் நிலையில் நாங்கள் சந்தர்ப்பவாதிகளாக செயல்படக் கூடாது. ஜேர்மனியில் ஹிட்லர் யூதர்களை கொலை செய்த போது அங்கு இடம்பெற்ற வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கையாகவே இதனை நான் காண்கிறேன். அதனால் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன், தொழிலுக்கு செல்பவர்களுக்கு அங்கு இராணுவ பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் இந்த நாட்டில் வேறு விடயங்களும் இடம் பெறக்கூடும் - என்றார்.

ரூபா 100 கோடி இழப்பீடு கோரி ஷானி அபேசேகர மனு தாக்கல்!

கொழும்பு, நவ. 25

பொய் வழக்குகள் சுமத்தி சிறையில் அடைத்து நீதித்துறையை துஷ்பிரயோகம் செய்ததன் மூலம் தனது சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தியவர்களிடமிருந்து ரூ.100 கோடி இழப்பீடு கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டவர்களிடம் இந்த நட்ட ஈட்டை மீளப் பெற்றுத்தருமாறு அவர் கோரியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, மேல்மா காணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா, பொலிஸ் பொறுப்பதிகாரி ஜகத் நிஷாந்த மற்றும் சட்டமா அதிபர் ஆகி யோர் மனுவில் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் ஊடாக, கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் ஷியாம் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிகள் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் தமக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் விசாரணைகளை மேற்கொண்டதாக ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் மேல்மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் தீர்மானத்திற்கு அமைய இந்த விசாரணை நடத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விசாரணைகளின் போது, கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த ஆகியோர் தனக்கு எதிராக பொய்யான வாக்குமூலங்களை வழங்குமாறு பல்வேறு நபர்களுக்கு அழுத்தம் கொடுத்த தாக ஷானி அபேசேகர தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தான் கைது செய்யப்பட்டு கம்பஹா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டு பல மாதங்களின் பின்னர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் விடுவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம், பிரதிவாதிகள் நீதித்துறை செயல்முறையை தவறாகப் பயன்படுத்தியுள்ளனர் மற்றும் தீங்கிழைக்கும் வகையில் செயற்பட்டு, தனது சுய மரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு, 100 கோடி ரூபா நட்டஈடு கோரி ஷானி அபேசேகர இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

புதிய ஏற்றுமதித்துறை குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும்!

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கட்டமைப்பதற்கு தற்போதுள்ள ஏற்றுமதிச் செயற்பாடுகளை வலுவூட்டுவது மாத்திரம் போதுமான தல்லவென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகையால், புதிய ஏற்றுமதித்துறை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 25 ஆவது ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதற்காக புதிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டுமெனவும் அவர்களுக்கான வசதிகளை அரசாங்கம் வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், தற்போது பாராளுமன்றில் முன்மொழியப்பட்டுள்ள பட்ஜெட். இலங்கை கடன் பெற்றுக்கொள்ளாத முதலாவது பட்ஜெட்டாகும். வற் என்ற பெறுமதி சேர்வரியை அதிகரித்து இலங்கை கடன் பெற்றுக்கொள்ளாமல் செலவுகளை நிவர்த்தி செய்யும். சிலர் எம்மை விமர்சித்தாலும் எதிர் காலத்தில் அது தொடர்பான அவர்களுக்கு புரிதல் ஏற்படும்.

அத்துடன், நமது ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டியது அவசியமாகும். தொழிற் சாலைத் துறையினையும் வலுவூட்டவேண்டும். பட்ஜெட்டில், முதல் முறையாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய வலுவூட்டலுக்காக தேசிய வலுவூட்டல் ஆணைக்குழுவை நிறுவ எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய ஏற்றுமதித்துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். அதற்குப் புதிய முதலீடுகளை பெற்றுக் கொள்ள வேண்டும்- என்றார்.

சஜித்தின் கோரிக்கையை ஏற்று சபாநாயகர் ரணிலுக்கு கடிதம்

கொழும்பு, நவ. 25

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பேரவைத் தலைவர் என்ற முறையில் தாம் அதைச் செய்வதாகவும் சபாநாயகர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் ஜனாதிபதி சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேரவையின் தாமதங்கள் குறித்து ஆராய ஒரு தெரிவுக்குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட சபாநாயகர், "நான் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதி, அவரது கருத்து குறித்து அரசியலமைப்பு பேரவையின் நிலைப்பாட்டை விளக்குவேன்." என்றும் சபாநாயகர் வலியுறுத்தினார்.

அத்துடன், பொலிஸ்மா அதிபர் மற்றும் இலஞ்ச - ஊழல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் அங்கீகாரம் தொடர்பான விடயங்கள் இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்படும் எனவும் சபாநாயகர் உறுதியளித்தார்.

பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் அநுராதபுரத்தில் வைத்தியர் கைது!

கொழும்பு, நவ. 27

தனது தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வந்த 29 வயதுடைய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரால் புளியங்குளம் பிரதேசத்தில் நடத்தப்படும் வைத்திய நிலையத்தில் சிகிச்சைபெறச் சென்ற 29 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

சம்பிக்கவுக்கு எதிரான வழக்கை இடைநிறுத்த நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, நவ. 25

கடந்த 2016ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் பாரிய வாகன விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு அறிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலிலிருக்கும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றை விசாரிப்பதற்கு அனுமதியளித்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு:

இரு கட்டங்களாக ஜனவரி முதல் அமுல்!

கொழும்பு, ஜனவரி 25

அரச ஊழியர்களுக்கு முன்மொழியப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வில் 5 ஆயிரம் ரூபாயை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்க அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. மிகுதி 5 ஆயிரம் ரூபாய் ஏப்ரல் மாதம் முதல் வழங்கவும் ஆராயப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் அண்மையில் நடந்த அரச வருமானப் பிரிவின் கூட்டத்தில் இந்த விடயங்கள் உரையாடப் பட்டன.

ஜனாதிபதி பணிமனையிலிருந்து 2023 ஆம் ஆண்டு மாநில வருவாய் பிரிவின் எதிர்பார்க்கப்படும் நிதிநிலை அறிக்கையில் முன்வைக்கப் பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த விவாதங்கள் நடத்தப்பட்டன, இது ஜனவரி மாத தொடக்கத்தில் சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த முடியும் என்று சுட்டிக்காட்டியது.

இதன்படி, ஜனவரி முதல் அரச ஊழியர்கள் 5 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வையும் ஓய்வூதியம் பெறுவோர் முழு அதிகரிப்பான 2 ஆயிரத்து 500 ரூபாயையும் பெறுவார்கள்.

வரவு - செலவு திட்ட உரையின்போது, அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு உதவித் தொகையாக 10 ஆயிரம் ரூபாயும் ஓய்வூதிய தொகையாக 2 ஆயிரத்து 500 ரூபாயும் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் குழந்தைகள் கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை!

சி.ஐ.டியின் விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, நவ. 25

இலங்கையில் குழந்தைகளை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் கும்பல் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த குற்றங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸிடம்நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

அதிகளவிலான குழந்தைகள் கண்டி பிரதேசத்தில் இருந்து கடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பாக நோர்வேயில் இருக்கும் இலங்கை பிரஜை ஒருவரிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உயர்நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்பு, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலங்கள் சர்வதேசத் தரத்தில் இல்லை!

ஐ. நா. அறிக்கையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பன தொடர்பில் அதீத கவனம் செலுத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் மூவரால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இரு சட்டமூலங்களும் சர்வதேச தரங்கள் மற்றும் சட்டத்திற்கு இணங்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான விசேட பிரதிநிதி ஐரின் கான், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் மற்றும் செயல்படுதலுக்கான உரிமைகளை பாதுகாப்பதற்கான விசேட பிரதிநிதி கிளமண்ட் வோலே மற்றும் தனியார் உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி அனா பிராயன் ஆகியோரால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்பட்ட தனிநபருக்கான உரிமைகள், கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மற்றும் அமைதியாக ஒன்றுகூடுதலுக்கான உரிமை என்பன இந்த இரண்டு சட்டமூலங்களாலும் மீறப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இரு உலகளாவிய பிரகடனங்களிலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாக ஐ. நா. விசேட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். உத்தேச நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிறைவேற்ற வில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

உத்தேச சட்டமூலங்களின் ஊடாக நிகழ்நிலையில் கருத்து வெளியிடுவதற்கான உரிமை மீது கட்டுப்பாடுகள் விதிக்கப் படுவதுடன், கடுமையாக அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் செயல்பாட்டாளர் களுக்கு எதிராக தடைகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப் படக்கூடும் என ஐ.நா. விசேட பிரதிநிதிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் அனைத்து தரப்பினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்து இந்த சட்ட மூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ள தாகவும் அவை வெவ்வேறு துறைகளை சேர்ந்தோர் கருத்து வெளியிடுவதற்கு காணப்படும் உரிமை மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்திற்கமைய ஆணைக்குழுவை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், அரசாங்கம் தொடர்பில் பக்கசார்பற்ற முறையில் செயற்படும் ஊடக நிறுவனங்களை தண்டிக்கவோ அல்லது உரிமத்தை இரத்து செய்யவோ நாட்டின் நிர்வாக அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்குமென ஐ.நா. விசேட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த கண்காணிப்பு செயல்பாடு சுதந்திரமான மற்றும் அழுத்தங்களுக்கு உட்படாத அமைப்பாக இருக்க வேண்டும் எனவும் அதில் அரசியல் தொடர்புகள் இருக்கக்கூடாது எனவும் அவர்கள் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த இரு சட்டமூலங்களையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்த பின்னர் முறையாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென ஐ. நா. விசேட பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இராணுவ குறைப்பு சாத்தியம் இல்லை!

கூறுகிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ. 25

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்திய மாகாது என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது. எனவே பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டேயாகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமது குறுகிய தேவைகளுக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தின. இதன்பெறுபேறு ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பு துறையில் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு 423 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை விட இம்முறை 12 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்துக்கு 218 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி ஒதுக்குவது அவசிய மற்றது என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். பொருளாதார பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் இராணுவத்தினரது எண்ணிக்கை திடீரென குறைவடைந்துள்ளது. இறுதிக் கட்ட

யுத்தத்தின் போது 2 இலட்சமாக காணப்பட்ட இராணுவத்தினரது எண்ணிக்கை தற்போது 1,53,000 ஆக உள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை 1 இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்திய மாகாது.

நவீன உலகுக்கு பொருந்தும் வகையில் இராணுவத்துக்கு ஆயுதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் பயன்படுத்த முடியாத யுத்த தாங்கிகளே இராணுவத்திடம் உள்ளன. விமானப்படையிடம் ஒரு ஜெட் விமானம் மாத்திரமே உள்ளது. ஆகவே இம்முறை புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்ய வேண்டும். தற்போது தேசிய பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தினருக்கும், ஏனைய மக்களுக் கும் இது வரை நியாயம் கிடைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்கு தலுக்கு யார் முக்கிய சூத்திரதாரி என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். எனக்கு வாய்ப்பு கிடைத்தால் சூத்திரதாரிகளையும், கடமைகளை தவறவிட்டவர்களையும் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன் - என்றார்.

"பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி எதற்கு?"

கொழும்பு, நவ. 25

போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் யுத்தம் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது என்றால் அதைப் பற்றியும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் காஸாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல் தொடர்பாக இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக இதே பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் ஒரு போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும், பலஸ்தீன மக்களுடைய பிரச்னை பேச்சு ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டது.

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களோடு "பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி எதற்கு?" ஐ.நாவுடைய செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் ஒன்று எழுதப்பட்டது. அந்தக் கடிதத்திலும் இங்கு நடைபெற்ற விவாதத்திலும் மிகத் தெளிவாக காஸாவில் நடைபெறுவது பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை என்ற விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அங்கு நடைபெறுவது இனப்படு கொலை என்பதை நியாயப்படுத்துவதற்குரிய பல அம்சங்கள் பட்டியிலிடப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கையில் வடக்கு, கிழக்கில் 15 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தவையாகும்.

இங்கு இனப்படுகொலையை செய்வித்த கருவி இந்த முப்படைகளும் பொலிஸும் ஆகும் - என்றார்.

PUTHIYA KURAL NEWSPAPER CANADA
Official Member of:
CAJ THE CANADIAN ASSOCIATION OF JOURNALISTS L'ASSOCIATION CANADIENNE DES JOURNALISTES

ENGLISH NEWS
POWERED BY NCM



New Canadians joined volunteers to help Moroccans rebuild following earthquake

Canadians of immigrant origin are among the hundreds of aid workers who have spent time on the ground in Morocco, assisting people whose lives have been turned upside down by the earthquake that devastated parts of the country last September.

A 6.9-magnitude earthquake shook the Atlas Mountains on Sept. 8, causing the deaths of at least 2,960 people and injuring another 5,674. More than 40,000 homes and 2,900 villages were damaged and 19,095 houses collapsed.

Among those assisting with the rebuilding is GlobalMedic, a Toronto-based organization that has taken over a local café in Morocco. Volunteers have produced more than 16,000 meals for people in need and distributed more than 800 meal kits to those affected by the quake. They have also installed six water filtration devices in villages where drinking water is unsafe, which provide clean water for up to 2,000 people a day.

Marty Bromley, Darius Sunga, and Edward Gan are among those overseeing GlobalMedic's efforts.

"Marrakech itself seemed to have recovered, although you could still see damage to many houses and structures caused by the earthquake," said Sunga, who came to Canada from the Philippines in 1983.

Darius Sunga, left, joined the volunteers with GlobalMedic to help bring aid to Moroccans. Photo: Submitted

"For the people that lived in the mountains, their situation is more dire. A lot have lost loved ones, properties and lives they once knew."

Sunga, who also serves as a volunteer ski patrolman, was inspired to join Global Medic when the call went out for volunteers in the aftermath of Typhoon Haiyan in his homeland in 2013.

Morocco marks his fourth deployment, having previously been to Dominica (2017), and Romania (2022), as part of efforts to assist Ukraine.

Bromley, who was formerly with Vaughan, Ont.'s fire and rescue, migrated to Canada in 1958 from the island of Guernsey, just 22 kilometres off the coast of France. He landed in Morocco Sept. 19 and spent three weeks there.

"The damage was far worse up in the Atlas Mountains where clay brick and mortar homes didn't withstand the tremors," Bromley said. "Tragically, many people lost their lives and others lost their homes and livestock.

"In some parts, entire towns were turned into rubble."

So far, about 14 GlobalMedic personnel have spent time in Morocco, working in teams of two.

Gan arrived in Morocco on Oct. 3 and left on Nov. 6. The son of Polish immigrants to Britain, Gan moved to Canada in 1988 and worked in accounting and management until he recently retired.

"These people live in a harsh environment to begin with, so the earthquake has made it that much more challenging," he said.

Edward Gan, right, helps distribute supplies in Morocco. Photo: Submitted

"People need clean drinking water, sanitation, food, clothing and appropriate shelter for the coming rainy season and winter."

GlobalMedic donated an Alaska tent, which is a military-grade mobile structure that has been turned into a school in a mountain village south of Marrakech. The organization has also provided solar lights to ensure reliable lighting during times of crisis, and devices that can filter water from any fresh water source and last for up to a year.

Islamic Relief Canada is another organization helping to distribute supplies to isolated villages cut off due to blocked roads. Hassaan Sheikh, who served as manager of the organization's B.C. office, is coordinating the efforts.

"The feeling of desperation and panic is almost palpable," said Sheikh, who is originally from Pakistan.

"Families are scattering through the rubble with their bare hands, trying to find their loved ones. Those who have survived have lost family, friends and everything they own; they're left with nothing but the clothes on their backs.

"The situation is of absolute urgency — people need all the help they can get, and they need it immediately."

Another Canadian organization assisting in Morocco is Human Concern International (HCI), which has so far provided food assistance to 1,200 people, and distributed food baskets with staples such as tea, coffee, sugar, pasta, tomato sauce, lentils, butter, honey, dates, powdered milk, and chocolate spread. Families have also received formula and diapers and personal care items.

About 3,000 displaced individuals also received warm bedding and 12 displaced families were given extra-large tents. The organization has provided clothing and toys to 200 children and is also providing medical assistance to 200 families in Marrakech and Agadir.

Hassan Wadi, whose parents immigrated to Canada from Saudi Arabia, was overseeing the organization's operations with local partners.

He was named one of Canada's top 25 immigrants in 2021 by Canadian Immigrant magazine and was given an Award of Recognition by Mississauga, Ont. Mayor Bonnie Crombie in 2021 for assisting people during the COVID-19 pandemic.

Hassan Wadi, right, looked after Human Concern International's operations on the ground in Morocco. Photo: Submitted

"HCI is now shifting our focus to our Phase 2, dedicated to building permanent homes for these families," Wadi said. "Transitioning to the next phase of building permanent homes adds another layer of complexity.

"This involves not just construction but also planning, securing funding, and navigating local regulations and environmental concerns. It's a time-consuming and resource-intensive process, made more difficult by the need to ensure that the new homes are safe, sustainable, and well-suited to the needs of families."

The Molana Tariq Jamil Foundation raised funds to provide more than 700 blankets, as well as mattresses, hygiene kits, food packs, washing powder, soap, shampoo, combs, towels, and more.

Foundation president Imam Muhammad Nabil is coordinating efforts on the ground.

"As you observe the current circumstances, numerous individuals have tragically lost their dear ones," said Nabil, who is originally from Pakistan. "It is truly heart-wrenching, and no words can fully convey my emotions."

"I implore you to contribute generously to aid our fellow brothers and sisters in Morocco. Please lend a hand in aiding our Moroccan brethren who have suffered from the earthquake."

The Canadian Red Cross was in Morocco before the earthquake, providing health promotion activities and risk reduction for disaster preparedness. After the quake, the agency allied with close to 800 staff members and volunteers alongside partner agencies to organize relief and prepare for winter while providing health assistance, shelter, clean drinking water and sanitation, food parcels, kitchen sets, and hygiene kits.

"It's actually a US$100million operation in Morocco, because of the size of the operation and magnitude of the earthquake," said Chiran Livera, senior manager of international operations for Canadian Red Cross. "When the earthquake happened, those teams were already on the ground, and we were quickly able to activate them.

"One of the first things we did was provide financial assistance, because that is the best way we can support an emergency of this magnitude, so that we can distribute things very quickly," said Livera, who came to Canada from Sri Lanka as a child.

"It is already starting to snow in some of the affected areas. It is a mountainous country where the earthquake struck, so some are already experiencing very cold temperatures."

